1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele { grams: "CATHOLIC PRESS", JAFFNA. phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஆனிமாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 22-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சோழகக்காற்று புயல்போல வீசிக் கொண்டிருக்கிறது. மப்புமந்தாரம் காணப்படினும் மழையில்லை. அர்ச். அந்தோனியார்திருநாள் அடுத்துவருவதையிட்டு அம்முனிவர்பேராலுள்ள கோவில்களிலெல்லாம் திருவிழாக்கள் பரிமளிப்பாக நடைபெற்று வருகின்றன.

### முதலாவது அரிசிக்கப்பல்

24,287 அரிசிமூடைகளை ஏற்றிய கப்பலொன்று மசூலிப்பட்டணத்திலிருந்து சென்ற 5-ந்திகதி காங்கேசன் துறைத் துறைமுகம்வந்து சேர்ந்துள்ளது. யுத்தத்திற்குப்பின் மசூலிப்பட்டணத்திலிருந்து காங்கேசன்துறைக்கு வந்த முதலாவது அரிசிக்கப்பல் இதுவென்று சொல்லப்படுகிறது.

### தேவநற்கருணைத் திருநாள்

நம்முடைய ஆசனக்கோவிலிலே தேவநற்கருணைத்திருநாள் இம்மாதம் 12-ந் திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. அன்றுகாலை 7 மணிக்குப்பெரியபாடற்பூசை நிறைவேறும். சாயந்தாம் வேஸ்பர் பாடியதும் திவ்வியநற்கருணை நாதரின் திருப்பவனி ஆரம்பமாகி வழமைபோல ஞான ஆடம்பர வைபவங்களுடன் நடந்தேறும். அன்பின்தேவதிவிய அனுமானமாகிய அதிபூசித திவ்விய நற்கருணையில் எழுந்தருளியிருக்கின்ற நமது தெய்வீகஅரசர் திருப்பவனிகொள்ளவிருக்கும் வீதிகளை அவற்றின் இருமருங்கும் வசிக்கின்ற கத்தோலிக்கமக்கள் முன்போல அழகுறச்சிங்காரித்து, அவர்மட்டிலே தங்களுக்குள்ள வணக்கவழிபாட்டையும், அனந்தபக்திபற்றுதலையும் பிரத்தியட்சமாகக் காண்பித்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்களாக!

### புதுநன்மையும் உறுதிப்பூசுதலும்

நமது ஆசனக்கோவிலிலே இன்று சின்னச்சம்மனசுகளின் திருநாளென அறியப்படுகின்ற புதுநன்மைப்பெருநாளாகும். அதனால் இன்று காலை கன்னிகாமடத்து ஆங்கிலகலாசாலை, தமிழ்ப்பாடசாலை, சென் சாள்ஸ்பாடசாலை, அர்ச். ஆரோக்கியநாதர் பாடசாலை ஆதியவற்றைச்சேர்ந்த பிள்ளைகளும், பிறருமாக 250பேர் வரையில் புதுநன்மைபெறும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அவ்வேளை அவர்களின் பெற்றாரும், இனசனரும் கோவிலிலே பெருந்திரளாகச் சமுகமளித்திருந்து பின்னர் அவர்களை அவரவர்இல்லங்களுக்கு அழைத்துச் சென்று பரிமளிப்பான கொண்டாட்டம் நடத்தினார்கள். இன்றுசாயந்தரம் நம் மேற்றிராணியாண்டவர் ஆசனக்கோவிலுக்கெழுந்தருளிப் பிள்ளைகளும், வளர்ந்தவர்களுமாகச் சுமார் 300 பேருக்கு உறுதிப்பூசுதல்அருளுவார்.

### ஆனையிறவுப் பரவைக்கடல்

ஆனையிறவுப் பரவைக்கடல் நல்லதண்ணீர்த் திட்டத்தின் மேற்கு அணைக்கட்டுச் சம்பந்தமாக நீர்ப்பாசனபகுதிக்கும், உப்புப்பகுதிக்குமிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதுகாரணமாக இத்திட்டத்தின் முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### 20-ந்திகதி விடுமுறையன்று

சூரியகிரகணம் தோன்றவிருப்பதை முன்னிட்டு ஆனிமாதம் 20-ந் திகதி திங்கட்கிழமையை அரசாங்கவிடுமுறை நாளாக்க வேண்டுமென்று சிலர் அருட்டிக்கொண்டு வந்தனர். இதுவிஷயமாய் மந்திரிசபைஆலோசித்து அன்றுதினம் விடுமுறை அளிப்பதில்லையெனத் தீர்மானித்திருக்கிறது.

### மத்திய மின்சாரநிலையம்

யாழ்ப்பாணத்திலே மத்தியமின்சாரநிலையமொன்று அமைப்பதற்கென அரசாங்கம் சென்றதிங்கட்கிழமை 45 லட்சம்ரூபா அனுமதித்திருக்கிறது. அத்துடன் காங்கேசன் துறைத் துறைமுகத்தைக் கப்பற் போக்குவரத்துக்குத் திருத்தி வளப்படுத்துதற்கென்றும் 45 லட்சம்ரூபா அனுமதித்திருக்கிறது. இன்னும் தேயிலைஏற்றுமதி வரியையும் சென்றசெவ்வாய்க்கிழமை முதல் நூற்றுக்கு 50 விகிதம் குறைத்துவிடவும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

### கிரகணமும் மிருககாட்சிச்சாலையும்

நிகழும்ஆனிமாதம் 20 ந்திகதியன்று பூரணசூரியகிரகணம் நிகழும்போது தெகிவலையிலுள்ள மிருககாட்சிச்சாலை அதிகாரிகள் அக்காட்சிச்சாலையிலுள்ள மிருகங்கள் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை அவதானிக்க விருக்கின்றார்கள். அந்தவேளையை இரவென்று எண்ணிக்கொண்டு மிருகங்கள் உறங்க ஆரம்பிக்கும் என்பதுதான் அவர்களின் கருத்தாகும். ஆனால், சூரியகிரகணம் ஏற்படும் சிலசமயங்களில் அவைகள் பீதியடைவதும் உண்டென அவர்கள் எண்ணுகின்றார்கள். அதனால் எந்த நிலைமையையும் சமாளிப்பதற்காக மிருககாட்சிச்சாலை அதிபர் சகலகாவலாளிகளுக்கும் ஆயுதங்கள் வழங்கவிருக்கின்றார்.

### சூரியகிரகணமும் கண்பார்வையும்

இம்மாதம் 20-ந்திகதியன்று நிகழவிருக்கும் சூரியகிரகணத்தைப் பார்ப்பதால் கண்பார்வை கெடக்கூடிய அபாயம்உண்டென்று அரசாங்க சுகாதாரப்பகுதியார் எச்சரிக்கைசெய்திருக்கின்றனர். புகைக்கண்ணாடிகள்கொண்டும், விரல்களினூடாகவும் கிரகணத்தைப் பார்க்கும்முறை பிழையானதென்றும் அவர்கள்தெரிவித்திருக்கின்றனர். பொதுவிலே கிரகணத்தைப் பாராமல்விடுவதே புத்தியாம். ஆனால், பார்க்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தடித்தகாகிதத்தில் ஊசித்துவாரங்கள் உண்டுபண்ணி அத்துவாரங்கள் மூலம் கருமையான கடதாசிஒன்றில் சூரியவடிவம் விழச்செய்து பார்ப்பதுதான் பிழையில்லாத முறையாகுமெனத் தெரிவிக்கப்படுகிறது. சூரியகிரகணத்தைப்பார்க்க ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### செவிடர் குருடர்களுக்கு வீடுகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள செவிடர், குருடர்களுக்கென்று கைதடியிலுள்ள முடிக்குரியகாணியிலே சீக்கிரம்வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. இதுவிஷயமாய் கொழும்புச் செவிடர், குருடர் பாடசாலை நிர்வாகிகள் தேசிய வீடமைப்புக் கம்மிஷனரை ஏற்கனவே கண்டு பேசியிருக்கிறார்கள். இவ்வீடுகளில் குடியிருக்கும் செவிடர், குருடர்கள் குடிசைக்கைத்தொழில்கள்செய்து பிழைப்பதற்கான வசதிகள் அளிக்கப்படும்.

### வரவுசெலவுத் திட்டம்

வருகிற ஐப்பசிமாதம் 1-ந் திகதியுடன் ஆரம்பமாகவிருக்கும் இலங்கைப் புதியஅரசிறை வருடத்திற்கான அரசாங்க செலவுத்திட்டம் தயாரிக்கப் பெற்று மந்திரிசபையால் ஆராயப்பட்டு வருகிறது. புதிய அரசிறைவருடத்தின் உத்தேசசெலவுமதிப்பு 119 கோடியே 79 லட்சத்து 43 ஆயிரத்துத் 981 ரூபாவாகும். இத்தொகை நிகழும் அரசிறைவருடச் செலவுதொகையிலும் 18கோடியே 50லட்சம்ரூபா கூடியதாகும். புதியஅரசிறைவருடத்திலே கல்விச்செலவு 3கோடியே 10லட்சம்ரூபாவால் அதிகரித்திருக்கிறது.

### அரசகரும மொழிகள்

"சிங்களம் மாத்திரமே அரசகருமமொழியாக இருக்கவேண்டும்" என்று சனப்பிரதிநிதிகள் சபையிலே தண்டகமுவாப் பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. ஐ. எம். ஆர். ஏ. இறியகொல்ல என்பவர் சென்றசெவ்வாய்க்கிழமை அரசாங்க பாராளுமன்ற கட்சிக்கூட்டத்தில் கொண்டுவந்த பிரேரணையானது அரசாங்ககொள்கைக்கு முரண்பட்டதாகையால் நிராகரிக்கப்படலாயிற்று. "சிங்களமும், தமிழும் அரசகரும மொழிகளாக இருக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாகும்; இரு மொழிகளுக்கும் சமஅந்தஸ்துக் கொடுப்பதுதான் அரசினரின்நோக்கம்" என்று அரசாங்ககட்சி அங்கத்தவர்ஒருவர் அன்றையகூட்டத்தின்பின் தெரிவித்திருக்கின்றார்.

### சூரிய கிரகண ஆராய்ச்சி

இம்மாதம் 20-ந் திகதியன்று நடைபெறவிருக்கும் பூரணசூரியகிரகணத்தை அவதானிக்கவிருக்கும் பிரித்தானிய-இலங்கைக்கோஷ்டிக்குத் தலைவராக இலங்கைவிஞ்ஞானியான திரு ஈ. டபிள்யு. மயில்வாகனம்அவர்கள் தெரியப்பெற்றிருக்கின்றார். இலங்கையிலே கிரகணத்தை அவதானிப்பதற்குச் சிறந்தஇடம் எதுவென்பதுபற்றி அமெரிக்க – ஐரோப்பிய வான சாஸ்திரிகளிடையே இன்னுமே அபிப்பிராய பேதம் இருந்துவருகிறது. பொலனறுவை, சிகிரியா, ஹிங்குரக்கொடை ஆகிய இடங்கள்தான் கிரகணத்தைஅவதானிப்பதற்குச் சிறந்த இடங்களென்று ஐரோப்பிய வானசாஸ்திரிகள் கூற, அமெரிக்க வானசாஸ்திரிகளோ மட்டக்களப்புப் பகுதியைச்சேர்ந்த கற்குடாதான் மிகச்சிறந்த இடமெனக் கருதுகின்றனர். என்றாலும் சூரியகிரகணத்தை அவதானிப்பதெல்லாம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததாம்.

### இரத்தஉபகாரத் திட்டம்

பிற்றிக்கால் கோறளை வடக்கிலுள்ள கிராமஅபிவிர்த்திச் சங்கங்களால் தொடக்கப்பட்டுள்ள ஓர் இரத்தஉபகரிப்புத் திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 2,500 தொண்டர்களிடமிருந்து இரத்தங்கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே இச்சங்கங்களைச்சேர்ந்த 360 அங்கத்தவர்கள் பதிவுசெய்யப் பட்டுவிட்டார்கள். இரத்தம் உதவுதற்கென்று ஒருமுறையில் 30பேரே ஏற்றுக்கொள்ளப் படுவார்களெனக் கொழும்பிலுள்ள இரத்தவங்கி அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறது. அதனால் 30பேரைக்கொண்ட முதலாவதுகோஷ்டி இம்மாதம் 8-ந் திகதி சென்று இரத்தம்உதவித் திரும்புதற்கான ஒழுங்குசெய்யப்பட் டிருக்கிறது.

### மார்கழிமாத ஜி. சி. ஈ. பரீட்சை

சென்றமார்கழிமாதம் நடந்தேறிய பொதுத்தாராதரப்பத்திர பரீட்சைக்குச் சமுகமளித்த மாணவர்மாணவிகளில் அதிகப்பற்றோர் அரங்கேறாத காரணங்களைப்பற்றிய அறிக்கைகளைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு வடபகுதிவித்தியாதிகாரி கலாசாலைகள், கல்லூரிகளின் அதிபர்களை ஓர்சுற்றுக்கடிதத்தின்மூலம் கேட்டிருக்கின்றார். நூற்றுக்கு 50 விகிதத்திற்குக்குறைவாகப் புள்ளிகள்பெற்றுள்ள மாணவர் மாணவிகளுக்கு அந்தந்தப்பாடத்தைப் படிப்பித்த ஆசிரியர்களே இந்நிலைமைக்கான காரணங்களைத் தெரிவிக்கவேண்டுமென்றும், 35 விகிதத்துக்குக் குறைவாயிருந்தால் அந்தந்தக் கலாசாலைகள், கல்லூரிகளின் தலைவர்களே அறிக்கைகள் அனுப்பவேண்டுமென்றும் அந்தச்சுற்றுக்கடிதம் கூறுகின்றது.

### அர்ச். சூசையப்பர் பந்தி

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல்தருமசபை, அர்ச். சூசையப்பர் பந்தியின் வருடாந்தபொதுக்கூட்டம் சென்ற 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்குச் சென்சாள்ஸ் பாடசாலை மண்டபத்திலே, அப்புக்காத்து திரு. றெஜிஸ் இராசகாரியர் அவர்கள்தலைமையில் விமரிசையாக நடந்தேறியது. அதற்குப் பலகுருமாரும், தனிச்சங்க தலைவரும், அங்கத்தவர்களும், பல்வேறுபந்திகளின் தலைவர்களும், அங்கத்தவர்களும், உபகாரிகளுமாகத் திரளானோர்சமுகமளித்தார்கள். பந்தியின் வருடாந்தஅறிக்கையும், வரவுசெலவுக்கணக்கும் வாசிக்கப்பட்டபின், வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்கள் "நிகழும்நூற்றாண்டிலும் கத்தோலிக்கஉலகத்துக்குச் சென் வின்சென்ற் டீபோல்சபை அவசியம்வேண்டியதுதானா?" என்பதைப்பீடிகையாகக் கொண்டு, வின்சென்ற் டீபோல் தருமசபையின் ஆரம்பத்தையும், அதன் இலட்சியங்களையும், அதனால்உலகம் அடைந்துகொண்டுவரும் அளவிறந்த நன்மைகளையும் பலவிதஎடுத்துக்காட்டுகளுடன் விளக்கமாக எடுத்துக்காட்டிச் சபையோரின்உள்ளங்களைக் கவரத்தரும்முறையிலே அரியதோர் சொற்பொழிவுநிகழ்த்தினர். ஈற்றிலே, பலராலும் குறிப்புரைகள் கூறப்பட்டுச் செபத்துடன்கூட்டம் நிறைவாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலில் வாடிய மலர்

—: கே. எஸ். ஜி. பெரோா :—

விண்திரையைக் கிழித்துக்கொண்டு மின்னல் எட்டிப்பார்த்தது. எங்கும் இடிமுழக்கம். விண்மீன்கள் பயந்து கார்மேகங்களால் தங்கள்ஒளிபொருந்திய முகங்களை மறைத்துக்கொண்டன. செகநாதன் ஓர் ஆற்றங் கரையால் நடந்துசென்றான். அவன் தனதுவாழ்வில் நம்பிக்கைஅற்றவனுய்க் கிழிந்த ஆடைகளை அணிந்தபடியே தலையை நோக்கியவண்ணம் பதமையாக நடந்து சென்றான். புயற்காற்றுவேகமாய் வீசிற்று. இயற்கை அன்னையைத் தானும் பகைத்தவளாய்த்தோன்றிய இப்புயல் அவன்மனதிற்தோன்றிய புயலுக்குச் சமானமாயிருந்தது.

மதுபானத்துக்கு அடிமையான அவன் குடிவெறிமயக்கத்தால் தனது மனைவியைத் துன்பப்படுத்தினன். அடிமேல்அடி அறைந்து அவளை வருத்தினன். வீட்டிலிருந்த பானைசட்டி, பீங்கான், நாற்காலி அனைத்தையும் உடைத்துநாசமாக்கினன். வியர்வை சிந்திப் பிரயாசப்பட்டுச் சம்பாதித்த பணத்தைக்குத் தானே அழிவுஎண்ணு பண்ணுவதை அவன்சற்றுமே சிந்தித்தானில்லை. அவைகளைத் திரும்பவும் விலைக்குவாங்கத் தானே உழைக்க வேண்டுமென்று சற்றுமேநினைத்தானில்லை. ஆம், மதுபானத்துக்கு அடிமையானவனின் கதி இதுதான்.

திவ்வியபூசை, தேவதிரவிய அனுமானங்களை அவன் கைவிட்டான். குடும்பம் மாசைப்பகைத்தான். மனைவிமக்களை வெறுத்தான். மனிதர்மட்டிலே நேசமற்றவனுக்குக் கடவுளில் என்னநம்பிக்கை? கடவுளிலே நம்பிக்கைஇழந்தவனுக்கு வாழ்வில் என்னநம்பிக்கை? என்னஇன்பம்? மனைவிமக்களின் அன்பைஇழந்தஅவன் கடைப்பிணமானன், அனைவராலும் துவேஷிக்கப்பட்டான். துஷ்டன், குடிகாரன், கொடியவன் என்று அனைவருமேஅவனை நிந்தித்து ஒதுக்கினர். அனைவராலும் வெறுக்கப்பட்டஅவனே கடைசியாகத் தனது வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டான். கடவுளைத்தானும் வெறுத்தவன் கடவுளைத்தேடக் கவேண்டுமென்று எண்ணவில்லை. தற்கொலைசெய்தாவது தன்னுடைய நிசிதவாழ்க்கைக்கு முடிவு கட்டத் தீர்மானித்தான்.

அன்றுஅவன் ஆற்றங்கரையை நாடிச்சென்ற காரணம்இதுதான். தற்கொலைசெய்தமட்டிலே இக்கொடிய வாழ்வினின்று விடுதலையடையமுடியுமென்று திடசங்கல்பம் செய்துகொண்டான். வாழ்க்கையில் சகலநம்பிக்கையையும் இழந்தவனைப்போல் அன்று அவன் ஆற்றங்கரையோரம் அடிமேல் அடிவைத்து நடந்துசென்றான். தற்கொலை ...... ஆம், இத்தருணத்தில் அவனது சுதந்திரக்கருவி தற்கொலைதான். கைத்துப்பாக்கியை எடுக்கச் சட்டைச்சாக்கினுள் அவனுடைய கை நுழைந்தது. அப்போது துப்பாக்கியில் ஏதோசிக்குண்டிருப்பதாக அவன் உணர்ந்தான். அதுஎன்னவாய் இருக்கக்கூடுமென்று கண்டுகொள்ளத் துப்பாக்கியை வெளியேஇழுத்து எடுத்தான். அப்போது அதனோடு சிக்குண்டுகிடந்தது ஓர்செபமாலை. ஆம், அவன்தாய் அவனுக்குக்கொடுத்த செபமாலை.

அவனுடையதாய் மாணத்தருவாயில் இருந்தபொழுது, அவனை அழைத்து அருகில் உட்காரச்செய்து, அந்தச்செபமாலையை அவன்கைகளில் வைத்து, 'மகனே, இந்தச்செபமாலை எனதுவாழ்க்கையின் ஓர்ஊன்றுகோலாக அமைந்தது; இன்னல்களிலே இன்பத்தையும், வாழ்க்கையில் நம்பிக்கையையும் எனக்கு அளித்தது; எனது வாழ்க்கைப்படகு ஆத்தும சண்டமாருதத்தில் சேதமடையவிடாது, கற்பாறைகளில் மோதவிடாது என்னைக் கரை சேர்த்தகலங்கரைவிளக்கு; தேவதாயாருக்கு அளிக்கக்கூடியமலர்களுள் மிக வாசனைநிறைந்த மலர்மாலை செபமாலை; மனைவிமக்கள் உன்னைமறக்கக்கூடும்; பெற்றூர்உறவினர் உன்னை வெறுக்கக் கூடும்; உலகந்தானும் உன்னைப்புறம் போக்கக்கூடும்; ஆனுல், செபமாலையை நேசிப்பவனுக்குத் தேவதாயார் என்றுமே தஞ்சமளிப்பார்; இந்தச்செபமாலை வாழ்க்கையில் உனக்குப்பெரும் ஆறுதல் அளிக்கும்; செல்லுமிடமெல்லாம் இந்தச்செபமாலையை எடுத்துச் செல்; செபமாலைசொல்ல என்றும்மறவாதே' என்றுசொல்லிவிட்டு மாணத்திரையுள் மறைந்தாள்.

அந்தக்ஷணமே அவன் தாய் அவனுடைய மனத்திரைமுன்பாகக் காட்சியளித்தாள். ஆருயிர்அன்னையின் நினைவு அவனுடைய கல்நெஞ்சை உருகச் செய்தது. பாவம், துரோகமென்னும் கார்மேகங்களின் இருளால் மூடப்பட்டிருந்த அவனது ஆத்துமாவில் ஓர்ஒளி பிரகாசிக்கஆரம்பித்தது. மாணத்தருவாயில் அவன்தாய் சொன்ன அந்திய மொழிகள் ஒன்றின்பின்ஒன்றாக அவனது கல்நெஞ்சத்தின் கதவுகளைத்தட்ட ஆரம்பித்தன. "இந்தச்செபமாலை வாழ்க்கையில் எனக்கு நம்பிக்கை அளித்தது; வாழ்வில்உனக்குப்பெரும் ஆறுதல் அளிக்கும்." மனந்திரும்பாது மரிக்கிறதைவிட, மனந்திரும்பி வாழ்வது மிகநன்றென்று அப்போது அவன்உணர்ந்தான். கைத்துப்பாக்கியை எடுத்துஎறிந்தான் ஆற்றில். செபமாலையைக் கையில்எடுத்தான். நெடுநாள் சொல்லாமல்விட்டிருந்த பிரியதத்தமந்திரத்தை ஒவ்வொருசொல்லாக உச்சரிக்கஆரம்பித்தான். அவனுடைய வாழ்க்கையில் என்றுமில்லாத ஓர் நம்பிக்கை உதிக்கஆரம்பித்தது. சமீபத்திலிருந்த தேவமாதாவின் கோயிலிலே மரியன்னையின் வணக்கமாதப் பத்திமுயற்சி ஆரம்பமாகப்போவதை அறிவித்து அடித்த மணியோசை அவனை வாவழைத்தது. மெல்லநடந்துபோய்க் கோயிலை அடைந்தான். திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் நடக்கிறதைக்கண்டு கோவிலின். ஓர் மூலையில் முழந்தாளிட்டான். பீடத்தில் எழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பட்டிருந்த திவ்வியவெள்ளை அப்பத்தின் பேரின்பஒளி அவன்மனதைக்கொள்ளை கொண்டது. பலவருடங்களுக்குமுன் பயபக்தியுடன் முதல்நன்மை பெற்ற அந்தப்பாக்கியமானதினம் அவன் ஞாபகத்தில் வந்தது. அதைப்பற்றிச் சிந்தித்தபோது கோயில்முழுதும் ஒரே அமைதி காணப்பட்டது. சூரியனின் வருகையைக்கண்டு தாமரைமலர்கள் இன்புற்று மலர்வதுபோல அந்தப் புனித வெள்ளைஅப்பத்தின் பேரின்ப ஒளிகண்டு பாவ இருள் நீங்க, அவனுடையஆத்துமமும் அருள்பெற்று மலர்ந்தது. ஆசீர்வாதம் முடிந்ததும் மரியாயின்சேனைப் பிள்ளைகள்,

"அருள்நிறைமரி - அமலஉற்பவி
இருள்சூழ்பாரில் எமக்குதவி..."

என்றகீதத்தைப் பாடினர்கள். அநேகவருடங்களுக்குப்பிறகு அவன் செபஞ்செய்ய ஆரம்பித்தான். அருள் நிறைமரி, அமலஉற்பவி, இருள்சூழ்பாரில் எனக்குதவியாயிரும்; வாழ்க்கையில் நம்பிக்கையற்றுத் தியங்குகிறேன்; ஆதாரமற்று வருந்துகிறேன்; என்மேல் உமது இரக்கக்கண்களைத் திருப்பியருளும்; இருள்நிறைந்த பாதைகளிலே என்னைஒருசேதமுமின்றி வீடுகொண்டு போய்ச் சேர்த்தருளும் என்றான். திரும்பவும் செபமாலைசொல்ல ஆரம்பித்தான். புயலி[illegible] கொடியகரங்களில் வாடியமலர் தென்றற் காற்றுவீசத் திரும்பவும் விரிந்துமலர்ந்தது. தனது மனதில் என் [illegible] அன்று அவன் [illegible]

# "சபிக்கப்பட்டவர்களே! என்னைவிட்டகன்று..."

(சி. எஸ். நாயகம், ஸ்றேஷன்மாஸ்றர், கெம்பாஸ் — மலாயா)

(முன்தொடர்ச்சி)

நடுத்தீர்வைநாளிலே நாம் எப்படி உயிர்ப்போம்? அப்பொழுது "அவர் தம்முடையதூதர்களை எக்காளப் பெருந்தொனியோடு அனுப்புவார். அவர்கள் வானத்தின் மேல்முனைமுதல் கடைமுனைவரையில் நான்குதிசைகளுஞ்சென்று ......" (மத். 24 : 31) "மரித்தோரே! நடுத்தீர்வைக்கு எழுந்துவாருங்கள்" என்று எக்காளப் பெருந்தொனியோடு கூவிஅழைக்கவே, "ஒருகணப்பொழுதில், ஒருகண்சிமிட்டில் மரித்தவர்கள்யாவரும் அட்சயமாய் உயிர்ப்பார்கள்" (1 கொரி. 15 : 52). இங்கு 'அட்சயம்' என்பது சாகாவரம். இவ்விதம் உயிர்த்தெழுந்தபின், "இனிஅவர்கள் ஒருபோதும் மரிக்கமாட்டார்கள்" (லூக். 20 : 36). இவ்விதஉயிர்த்தெழுதலையே 'உத்தானம்' என்போம். அதாவது, நமது பாவத்துக்குத் தண்டனையாக நாம் மரிக்கவேண்டியது ஒருமுறைதான். உலகமுடிவில் உத்தானமான பின் பிறகுநாம் சாகாவரம்பெற்றவர்களாய், நரகத்துக்குப் போனுலென்ன, மோட்சத்துக்குப் போனுலென்ன இன்றுநாம் எப்படி ஆத்துமசரீரத்தோடு இருக்கிறேமோ, அப்படியே நித்தியத்துக்கும்இருப்போம். "மனிதர் ஒரேதரம் மரிக்கவும், அதன்பின் நடுத்தீர்க்கப்படவும் குறிக்கப்பட்டிருக்கிறார்கள்" (எபி. 9 : 27) என்பது வேத வாக்கியம்.

இவ்விதம் எல்லாரும் உயிர்த்தெழுந்தபின் நடப்பதென்ன? சகலரும் மின்னல்வேகத்தில் ஓர் குறித்த இடத்தை ஓர்கண்சிமிட்டில் போய் அடைவோம். "அப்பொழுது மனுமகனுடைய அடையாளமானது வானத்தில் காணப்படும். பூமியிலுள்ள சகல சாதிசனங்களும் புலம்பிநிற்க, மனுமகன் வானமேகங்களின்மேல் தமது தூதர்களுடன் மிகுந்த வல்லபத்தோடும், மகிமையோடும் வருவதைக்காண்பார்கள்" (மத். 24 : 30) அப்பொழுது பாவிகள் அச்சத்தினுல் விடவிடத்துப் போய்க் கிறீஸ்துநாதரின் வருகையை மேல்நோக்கிப் பார்க்கத்தானும் துணியாது நடுநடுக்கத்துடன், "குன்றுகளே! மலைகளே! எங்கள்மீதுவிழுந்து எங்களை நசுக்குங்கள்" என்று சொல்லித் தங்களைத்தாங்களே சபித்துக் கொள்ள, புண்ணியவான்களோ ஆனந்தப்பிரவாகத்தில் மூழ்கியவர்களாய், "அவரை எதிர்கொண்டழைக்க மேகங்களில்எடுபட்டு ஆகாசத்தை ஊடறுத்துச்செல்வார்கள்." (1 தெச. 4 : 16)

இவ்விதம்போய் அழைத்துவந்தபின் நடப்பதென்ன? "அவர் தம்முடைய மகத்துவபத்திராசனத்தில் வீற்றிருப்பார். அப்போது மேய்ப்பனுனவன் வெள்ளாடுகளினின்று செம்மறியாடுகளைப் பிரிப்பதுபோல், அவரும் தம்முடைய தூதர்களைக்கொண்டு அவர்களை வெவ்வேறாகப்பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலுமாக நிறுத்துவார்" (மத். 25 : 31–33). "இவ்விதமாகஅவனவன் தன்பூலோகசீவியத்தில் செய்தநன்மை தீமைக்குத் தகுந்தாற்போல், தன்சரீரத்துக்குரிய பங்கைப் பெற்றுக்கொள்ளும்படி நம்மில் ஒவ்வொருவரும் கிறீஸ்துநாதருடைய நியாயாசனத்துக்குமுன்பாக நிறுத்தப்படுவோம்" (2 கொரி. 5 : 10). "அப்பொழுது ஒவ்வொருவனுக்கும் அவனவன் கிரிகைகளுக்குத் தக்கதாகப் பலன்அளிக்கப்படும்" (மத். 16 : 27).

எப்படி? "அவரவர்செய்த பாவ புண்ணியங்களைச் சகலருமறிய வெளியாக்குவார்" (மத். 10 : 26). இப்பொழுது இரண்டாம்பேரும் அறியாதபடி இருளிற்செய்த பாவங்களெல்லாம் அப்பொழுது சந்தியிலிழுபடும். இப்போது எங்கட்கிருக்கும் வெட்கத்திலும்பார்க்க அந்தநேரத்தில் ஆயிரம் பதினுயிரம்மடங்குகூடுதலான வெட்கத்தையும், கிலேசத்தையும் நாம் அடைவோம. "மனிதர் பேசியிருக்கும் ஒவ்வொரு வீண்வார்த்தையின் பேரிலும் தீர்வைநாளில் கணக்குக் கொடுக்கவேண்டும்" (மத். 12 : 36). என்று நீதாசனத்தில் வீற்றிருந்து விசாரணைநடத்தும் நீதிபராகிய கர்த்தர் தாமே நம்எல்லோர்க்கும் முன்எச்சரிக்கையாகக் கூறியிருக்கிறார். அவ்வாறாயின் நாம்தினமும் எவ்வளவு வீண்வார்த்தைகளைப் பேசித்தள்ளுகிறோம். ஆம், நமதுநாவைக்கொண்டு தினமும் எத்தனை வீண்வார்த்தைகள், புறணிகள், அவதூறுகள், ஊத்தைப் பேச்சுகளை இடையறாது பேசித் தள்ளுகிறோம். ஓர்வீண்வார்த்தைக்கும் அத்தனைகண்டிப்பான கணக்கென்றால், நாம் கட்டிக்கொள்ளும் ஏனையபாவங்களின் முடிவென்ன?

நிற்க, இவ்விதம் சகலரின் பாவ புண்ணியங்களையும் சகலரும் அறிய வெளியாக்கியபின், தமக்கு இடதுபக்கத்தில் நிற்கும் வெள்ளாடுகளாகிய பாவிகளைநோக்கிக் கோடையிடி இடித்தாற்போல், "சபிக்கப்பட்டவர்களே! என்னைவிட்டகன்று பசாசுக்கும், அதன்தூதர்களுக்கும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்தியஅக்கினியிலே போய்விழுங்கள்" (மத். 25 : 41) என்று நமதுஆண்டவர் தம்முடைய கோபமுனிவில் சபித்துத்தள்ளித் தீர்த்துவிட்டதும், "தகரைகளைக்கட்டித் தீயில்சுட்டெரிப்பது எப்படியோ, அப்படியே அவருடையதூதர்கள் சகல இடறல்களையும், அக்கிரமங்களையும் செய்த அவ்வளவுபேரையும் கட்டுக்கட்டாகக்கட்டி நாகஅக்கினிச்சூளையிலே தள்ளுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத். 13 : 40-42). இத்துடன் நரகவாசல் நித்தியத்துக்கும்பூட்டி முத்திரையிடப்பட்டுவிடும். இவ்விதம் தள்ளுண்ட பாவிகள் நரகத்தில் தங்கள்சொந்த ஆத்துமசரீரத்தோடு இன்றுநாம் எப்படிஇருக்கிறேமோ அதேபோல அன்றுதொட்டு, "இரவும் பகலும் என்றென்றைக்கும் உபாதிக்கப்படுவார்கள்" (காட்சி. 20 : 10). ஆம், அவர்கள் அந்தஅக்கினிச்சூளையில் கிடந்துகொண்டு "சாவைத தேடுவார்கள்; ஆயினும் அதைக் காணமாட்டார்கள். சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள்; ஆனுல், சாவு அவர்களைவிட்டோடிப்போம்" (இசை. 2 : 19). ஆகவே, இனிமேல் "அவர்களுடைய புழுவும் (சரீரம்) சாகாது, அக்கினியும் அவியாது" (மாற். 9 : 45).

அங்ஙனமாக, கிறீஸ்துநாதர் ஜெருசலேம்பட்டணத்துக்குச் சமீபமாய் வந்தபோது, அதன்பேரில் கண்ணீர் விட்டுப் பின்வருமாறு வசனித்தார். "உனக்குக்கிடைத்த இந்தநாளிலாவது உன் இரட்சணியத்துக்கு உரியவைகளை நீ அறிந்திருந்தாலல்லோ தாவிளை. ஆனுல், இப்பொழுதுஅவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கின்றன. ஆகையால் உனக்கு ஒருகாலம்வரும். அப்போது உன்சத்துராதிகள் உன்னைச் சுற்றிலும் அகழிவெட்டி, உன்னைச் சூழவளைந்து, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி உன்னையும், உன்னிலுள்ள உன்பிள்ளைகளையும் தரைமட்டமாக்கி, உன்னிடத்தில் கல்லின்மேல்கல் நிற்கவிடார்கள். ஏனெனில், உன்னைநான் சந்திக்கவந்தகாலத்தை நீ அறியாமற் போனுய்" (லூக். 19 : 41–44). என்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### அச்சத்தின்மத்தியில் செபமாலை

குனட்எனப்படும் பிரயாணக் கப்பற் கம்பெனியைச்சேர்ந்த பிரித்தானிக்என்ற பிரயாணக் கப்பலின் கீழ்க்கூடம்ஒன்றிலே தீபற்றிப்பிடித்துச் சுவாலையின்றியே எரிந்துகொண்டிருந்தபோது, அதிற்பிரயாணஞ்செய்த கத்தோலிக்கபிரயாணிகள் கப்பற்தளத்தில் ஒன்றுகூடிக் குருவானவர்ஒருவர் வழிநடத்தச் செபமாலைசொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கப்பல் சமீபத்திலே நியூயோக்கிலிருந்து அயர்நாட்டைச்சேர்ந்த கோவேதுறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அத்திலாந்திக்சமுத்திரத்தின்மத்தியிலே அதில் தீபற்றிக்கொண்டது. அதைப்பற்றி ஒரேயொரு பிரயாணிமாத்திரம் தற்செயலாக அறியவந்ததும் அதைத் தனக்குள்தானே அந்தரங்கமாக மறைத்துவைத்துக்கொண்டான். பொகுல்லாஎனுமிடத்தைச் சேர்ந்தவரும், மினெசோட்ராநகரிலுள்ள அர்ச். சூசையப்பர்கல்லூரி அதிபருமான வண. பற்றிக் டோயில் சுவாமியார் கப்பலின் டக்ருடன் சம்பாஷிக்கச் சென்றபோது, அறிவுநினைவற்றிருந்த இருமனிதர் சிகிச்சைசெய்யப்படுவதைக் கண்ணுற்ருர். அப்போது கப்பலின் கீழ்க்கூடம் ஒன்றில் பற்றிக்கொண்டதீ அவர்களை மேற்கொண்டுவிட்டதென அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனேசுவாமியார் அக்கப்பலில் இருந்த ஐம்பதுகத்தோலிக்க பிரயாணிகளையும் கப்பற்தளத்திலே ஒன்றுகூட்டிச் செபமாலைசொல்லத் தொடங்கினர். அத்தருணம் கப்பலின் கீழ்க்கூடத்தில் பரந்த தீச்சுவாலை தீவிரமாக அணைக்கப்பட்டுவந்தது. "ஆனல், நாம்ஏன் செபஞ்செய்கிறேமென நான்ஒருவருக்குமே சொல்லவில்லை; சொல்லியிருந்தால் அது பிரயாணிகள்மத்தியிலே பயப்பிராந்தியை உண்டுபண்ணியிருக்கும்; மூன்று தினங்களின்பின்னரே இதைப்பற்றித் தெரிவிக்கவேண்டுமெனக் கப்பற்தலைவரிடம் நான் கூறினேன்" என்று சுவாமியார் கரைசேர்ந்ததும் கூறலாயினர்.

### கம்யூனிஸ்த வேலைநிறுத்தத் தலைவர்

பிரித்தானிய கம்யூனிஸ்த கட்சியிலே கடந்த 22 வருடங்களாக ஓர் அங்கத்தவராய் இருந்துவந்தவரும், 1947-ம் ஆண்டிலே அக்கட்சிக்கு மிகப்பெருந்தொகையானேரைச் சேர்த்துக் கொடுத்ததற்காக வெகுமதி சன்மானிக்கப்பெற்றவருமான் திரு. ரொமஇப் அவர்கள் மனந்திரும்பிச் சமீபத்தில்ஓர்புதன்கிழமை கத்தோலிக்க திருமறையிற் சேர்ந்துகொள்ளலாயினர். இவர் லண்டன்நகரிலே அநேக மியூனிசிப்பல்சபைத் தேர்தல்களில் ஓர்கம்யூனிஸ்த அபேட்சகராகப் போட்டியிட்டவர். 1945-ம், 1950-ம் ஆண்டுகளுக்கிடையிலே ஸ்ரீவெடோர்ஸ் – டொக்கேர்ஸ் ஐக்கியசங்கத்தின் தேசியதலைவராய் இருந்தவர். 1947-ம் ஆண்டு லண்டன்நகர கப்பல் பழுதுபார்க்கும் நிலையத் தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்குத் தலைமையாய் நின்றவர்.

### ஆறு குருசகோதரர்கள்

ஸ்பானியதேச பம்புலோனுவிலே சமீபத்தில் தொமினிக்குவின் சபையைச் சேர்ந்தவரான வண. ஜோஸ் லூயிஸ் சபால்சா பிறதர் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றனர். மறுநாள் அவர் நிறைவேற்றிய முதற் திவ்வியபூசையின்போது அவருடைய ஐந்து சகோதரர்—எல்லோரும் தொமினிக்குவின் சபைக்குருமார் — அவருக்கு உதவிசெய்து நின்ருர்கள். அவரின் ஆருவது சகோதரர்ஒருவரும் குருத்துவத்துக்குப் படிக்கத் தொடங்கினர். ஆனல், சுகத்தாழ்வு காரணமாகப் படிப்பைக் கைவிடவேண்டியவரானர்.

### விடுதலைபெற்ற அதிமேற்றிராணியார்

போலாந்திலே லிவவ்நகர் அதிமேற்றிராணியாரான சிலிப்பி ஆண்டவர் சோவியற் சிறைச்சாலை ஒன்றிலிருந்து விடுதலைசெய்யப் பெற்றிருக்கிருரென வீயென்னுநகரிலிருந்து அறிவிக்கப் பட்டிருக்கிறது. பூர்வீக கிறீஸ்துவ பிரிவினைச்சபையில் சேர்ந்துகொள்ளுமாறு ருஷியர்கள் செய்த பலவந்தத்தை எதிர்த்துநின்ற காரணமாக இவர் 1945-ம் ஆண்டு எட்டுவருடசிறைத்தண்டனை விதிக்கப்பெற்ருர். இத்தண்டனைகாலம் முடிவடைந்ததும் சிறைச்சாலையிலிருந்தே ஆயர்நிருபம் ஒன்றை எழுதிவெளியிட்டாரென்ற குற்றசாட்டின்பேரில் இவர்திரும்பவும் சிறைத்தண்டனை விதிக்கப்படலாயினர். விடுதலைபெற்றுள்ள இவர் தமதுபதவிக்குரிய கடமையை நிறைவேற்ருமலும், தமது அதிமேற்றிராசனத்துக்குத் திரும்பச்செல்லாமலும் விலக்கப்பட்டிருக்கின்ருர்.

### பழையதிருநாட்கள் முன்போல

தொழிலாளரான அர்ச். சூசையப்பரின் புதியதிருநாள் வைகாசி மாதம் 1-ந் திகதியன்று கொண்டாடப்படவேண்டுமெனச் சமீபத்திலே பரிசுத்த பாப்பரசர் பிரகடனஞ் செய்திருப்பதாலே தற்போது இருந்துவருகின்ற அர்ச். சூசையப்பரின இரு திருநாட்களிலும் எவ்விதமாற்றமும் ஏற்படும்போலில்லை. புதியதிருநாளை ஏற்படுத்தும் அதிகாரப்பத்திரம் சிறிதுகாலத்துள் திருச்சடங்காசார திருச்சங்கத்தால் வெளியிடப்பட விருக்கிறது. வழமையிலே வைகாசிமாதம் 1-ந் திகதியன்று கொண்டாடப்பட்டுவரும் அப்போஸ்தலர்களான அர்ச். பிலிப்பு, அர்ச். யாகப்பரின் திருநாள் மற்றோர் திகதிக்கு மாற்றப்படக்கூடும்போல் இருக்கிறது. அர்ச். சூசையப்பரின் மற்றிருதிருநாட்களும் பங்குனி 19-ந் திகதியன்றும், பாஸ்குத் திருநாளுக்குப் பின் வரும் மூன்ருவதுவாரப் புதன்கிழமையன்றும் கொண்டாடப்படுகின்றன.

### மனந்திரும்பிய புரொட்டஸ்தாந்தர்

முன்னர் ஓர் அங்கிளிக்கன் சபைப் புரொட்டஸ்தாந்தராயும், ரோயல் ஆகாயப்படை விமானியாயும் இருந்த திரு. ஆர்தர் சப்மன் அவர்கள் பகமாஸ் தீவைச் சேர்ந்த நசோநகரிலே சென்ற பெரியசனிக்கிழமையன்று குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்ருர். இவர் லண்டன்நகரில் பிறந்தவர். நசோநகரிலே பி. ஓ ஏ. சி. என அறியப்படுகின்ற பிரயாண ஆகாயவிமானப் கம்பெனியின் நிர்வாகஅதிகாரியாய் இருந்தபோது 1946-ம் ஆண்டு மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்துகொண்டார். இவர் அமெரிக்க ஐக்கியதேசத்திலும், ரோமாபுரியிலுள்ள பெதாகுருமடத்திலும் குருப்பட்டத்துக்குப் படித்தார்.

### பிரிவினைச்சபைக் குருமார்

மலையாளத்திலே ஜக்கோபித்த பிரிவினைச்சபையிலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையுடன் சேர்ந்துகொண்ட இருகுருமார் அங்குள்ள இருகத்தோலிக்க மேற்றிராசனங்களின் தலைவர்களாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றனர். இவர்களிலே 39 வயதுடையவரும், சென்னைச்சர்வகலாசாலைப் பட்டதாரியுமான பெனெடிற் மார் கிறெகோறியஸ் அதிமேற்றிராணியார் 1953-ம் ஆண்டு காலஞ்சென்ற மார் இவானியொஸ அதிமேற்றிராணியாரிடமாகத் திருவனந்தபுரத்துக்கும், சக்கரியாஸ் மார் அத்தனுசியஸ்மேற்றிராணியார் சென்றதைமாதமகாலஞ்சென்ற மார் செவெறியஸ் அதிமேற்றிராணியாரிடமாகத் திருவல்லாவுக்கும் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றனர்.

### மேற்றிராணிமார் எச்சரிக்கலாம்

மலையாளத்தைச்சேர்ந்த ஏர்ணக்குளநகரிலே இந்துக்கள் இருவரையும், கத்தோலிக்கர் ஒருவரையும் அடக்கிய தேர்தல் நீதிமன்றம்ஒன்று சமீபத்தில் நடத்தியவிசாரணையிலே, தேர்தல்களில் கம்யூனிஸ்தர்களுக்கு வாக்களிப்பதைத்தடுத்துக் கத்தோலிக்கமக்களை எச்சரிக்க மேற்றிராணிமாருக்குள்ள உரிமையை நிலைநாட்டியிருக்கிறது. மாக்ஸிய கேரள சோஷலிஸ்த கட்சியின் தலைவரான மத்தாய் மஞ்ஜூரன் என்பவர் தன்னைப்பற்றி மேற்றிராணிமார்செய்த எச்சரிக்கைகளே பொதுத்தேர்தலில் தான் தோல்வியடையக் காரணமெனக் குற்றஞ்சுமத்தியிருந்தார். தேர்தலுக்குமுன்னதாக வெராப்பளியின் அற்றிப்பெற்றி அதிமேற்றிராணியார் விடுத்த ஆயர்நிருபம்ஒன்றிலே, திரு. மஞ்ஜூரனை எதிர்த்துக் கத்தோலிக்கமக்களை எச்சரித்திருந்தார். திருச்சபைக் குருசிரேஷ்டர்கள் நீதிஸ்தலத்தில் பிரசன்னமாவதை இராச்சியசட்டம் அனுமதியாதிருந்தபோதிலும் அதிமேற்றிராணியார் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி நேர்முகமாக வாக்குமூலம் அளிக்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். ஆனல், அவருடையகேள்வி நிராகரிக்கப்படலாயிற்று. இராச்சிய பிரசைகளாகவுமே இருந்துவருகின்ற மேற்றிராணிமார் தேர்தல்விஷயமாய்த் தங்கள் ஞானமக்களை எச்சரிப்பதை இராச்சியசட்டம் தடுப்பதில்லையென்று நீதிபதிகள் தீர்ப்பளித்தார்கள்.

### இருபத்தோரு மேற்றிராணிமார்

நெதர்லாந்தெனத் தற்போது அறியப்படுகின்ற ஒல்லாந்திலே முன்னர் இருந்த மாஸ்றிச்ற் மேற்றிராசனத்தை ஆட்சிசெய்த மேற்றிராணிமார்களில் இருபத்தொருபேர் அர்ச்சியசிட்டராகத் திகழ்கின்ருர்கள். இந்த இருபத்தொரு அர்ச்சியசிட்டரும் அடுத்துநிகழும் ஆடிமாத ஆரம்பத்தில் ஒருங்கே மகிமைப்படுத்தப்படவிருக்கின்ருர்கள். அப்போது அந்நாட்டின் அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்கள் சகலரும் மாஸ்றிச்ற் நகர்சென்று, அங்கே அவர்களின் திருப்பண்டங்கள்கொண்டு நடத்தப்படும் மகாஊர்வலத்திற்குச் சமுகமளிப்பார்கள். இந்த இருபத்தொரு மேற்றிராணிமார்களிலும் முதன்முதலாக அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்றவர் அர்ச். சேர்வாத்தியூஸே. இவர் நான்காம்நூற்ருண்டில் வசித்திருந்தார். இந்த அர்ச். மேற்றிராணிமார்களின் திருப்பண்டங்கள்கொண்டு ஏழுவருடங்களுக்கு ஒருமுறை இந்தமகாஊர்வலம் நடத்தப்படுகின்றது.

### வடதுருவ சிறைச்சாலையில்

வடதுருவ வட்டாரத்தின் வடபாலுள்ள ருஷிய சிறைமுகாம் ஒன்றிலிருந்து விடுதலைசெய்யப்பெற்றுள்ள வண. பீற்றர் லெயோனிசுவாமியார் பன்னிருவருடங்களின்பின் கடைசியாகத் தம்து சுவநாடாகிய இத்தாலி போய்ச்சேர்ந்திருக்கின்ருர். ரோமாபுரியிலுள்ள ருஷிய குருமடத்தின் முன்னைநாள் மாணவரான சுவாமியார் 1943-ம் ஆண்டுவரையில் ருஷியாவிலே இத்தாலிய பட்டாளவிசாரணைக்குரவராகக் கடமைபார்த்துவந்தார். பின்னர் இத்தாலி யுத்தநிறுத்தஞ் செய்தபோதிலும் இவர் அங்கேயே தங்கி ஒடெசாநகரில் ஒருவருடகாலம் தொண்டாற்றிவருகையில் ருஷியபிரிவினைச்சபைத் தலைவர்களின் சூழ்ச்சியாலே கைதுசெய்யப்பெற்றுப் பத்துவருட சிறைத்தண்டனைக்குள்ளாயினர். 1954-ம் ஆண்டுவரை இவரைப்பற்றியசெய்திஒன்றும் எட்டவில்லை. பின்னர் விடுதலையடைந்த ஜேர்மன் யுத்தகைதிகள் இவரைப்பற்றித் தெரிவித்து, அவர் கடினசிறைவேலையையும், மற்றும் கஷ்டநிலைமைகளையும் பறுவாய்பண்ணுது தமது உடன்குருமாருக்கும், ஏனையவர்களுக்கும் ஆற்றிவரும் அருந்தொண்டுகளைப்பெரிதும்பாராட்டிப் பேசினர்கள். கடைசியாகச் சமீபத்திலேயே இவரிடமிருந்து ஓர்கடிதம் வரலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

பொதுக்கருத்து: டக்றர்மாரும், நோயாளர்களைப் பராமரிக்கும் நேர்ஸ்மாரும் கடவுள்முன்பாகத் தங்கள்பொறுப்பை உணரும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து: சீனதேச இளைஞர்களுக்காக மன்ருடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
ஆனிமாதம் 9-ந் திகதி

## தமிழும் சிங்களமும்

இலங்கைச் சர்வகலாசாலையிலே 1962-ம்ஆண்டுமுதல் சிங்களம்மாத்திரமே போதனமொழியாய் இருக்கவேண்டுமென்று உயர்தரகல்விக்கம்மிஷன் செய்திருக்கும் சிபாரிசானது தமிழ்மக்களிடையே கொந்தளிப்பை உண்டுபண்ணி விட்டிருப்பது ஓர் அதிசயமன்று. ஆனல், ஜனநாயகஆட்சியிலே இலங்கைமக்கள் சாதிசமய பேதமின்றிச் சமாதானமாய், சமத்துவமாய், ஒற்றுமையாய், உடன்பிறந்த சகோதரர்கள்போன்று உயிர்வாழவேண்டுமென்று பிரசாரஞ்செய்யப்பட்டுவரும் இந்தக் காலத்திலே, தனது மாறுபட்ட சிபாரிசானது தமிழ்மக்களின்—தமிழ்பேசும் மக்களின் மனதைப் புண்படுத்துமென்பதையும், இலங்கைமக்களை இரண்டு படுத்துமென்பதையும் இந்த உயர்தர கல்விக்கம்மிஷன் சிந்தியாமற்போனதுதான் பெரிய ஆச்சரியமாகும். 1962-ம்ஆண்டு முதல் இலங்கைச்சர்வகலாசாலையிலே சிங்களம்மாத்திரம் போதனமொழியாக இருக்கவேண்டுமென்று இந்தக்கம்மிஷன் சிபாரிசுசெய்யவேண்டிய காரணம் என்ன? இலங்கையிலே 1962-ம் ஆண்டுடன் — அதாவது இன்னுஞ் சுமார்ஏழுவருடகாலத்தில் தமிழ்பேசுவாரும், தமிழரும்இல்லாதொழிந்து போவரென்ற எண்ணமா? அன்றேல் தமிழ்பேசுவாரும், தமிழரும் இருந்தாலும் சிங்களத்தையே தனிமொழியாக்க வேண்டுமென்ற எண்ணமா? அன்றேல், பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்த பொழுது தமிழுக்கும், சிங்களத்துக்கும் சம அந்தஸ்துக் கொடுக்குமாறு இலங்கை அரசியற் சட்டத்தை மாற்றியமைப்பதாகத் தந்த வாக்குறுதியைக்காற்றில்பறக்க விடவேண்டுமென்ற எண்ணமா? அன்றேல் தனதுசிங்கள போதனமொழிச் சிபாரிசைத் தமிழ்பேசும் மக்கள் ஆட்சேபிக்க மாட்டார்களென்றுதான் இந்தக்கம்மிஷன் எண்ணிக்கொண்டதா? அவ்வாருயின் இப்போது பிரசண்டமாருதம்போல் எழுந்துகொண்டிருக்கும் ஆட்சேபனையை அது கவனித்து, தனதுசெயல் குளத்தைக் கலக்கியது போன்ற மதியீனச் செயலென்பதைச்சரிவர உணரவேண்டியதன்றே! ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்தபின் பல்வேறு முன்னேற்றகருமங்களையிட்டும், மக்களின் சுபீட்சவாழ்வை முன்னிட்டும் காலந்தோறும் எத்தனையோ கம்மிஷன்கள், கம்மிற்றிகள் நியமனம்பெற்றுப் புற்றீசல்களைப்போன்று தலைகாட்டியிருக்கின்றன. அவற்றின் விசாரணையாலும், ஆராய்ச்சியாலும், சிபாரிசாலும் கண்ட பலன்என்னவென்பதை நாம் அறிவோம். ஆகவே, உயர்தர கல்விக்கம்மிஷன்செய்துள்ள இச்சிபாரிசின்முடிபும் என்னவாகுமோவென்று அத்துணைபெரும் கவலைகொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆயினும் தமிழ்பேசுகின்ற மக்களின்மனதை அனுவசியமாகப் புண்படுத்தியும், அவர்கள்மத்தியிலே கண்டனங்களைஎழுப்பியும் விட்டிருப்பதுதான் அந்தச்சிபாரிசின் முதல் விளைவாகும். இதுவிஷயமாய்த் தபால், வானெலி மந்திரியார் திரு. எஸ். நடேசபிள்ளை அவர்களும், தற்காலிக போக்குவரத்து மந்திரியார் திரு. வி. குமாரசாமி அவர்களும் பிரதமரையும், கல்விமந்திரியாரையும் கண்டு பேசியவிடத்து: மொழிவிஷயத்திலே எந்தவிதமானமாற்றமும் இல்லையென்றும், சர்வகலாசாலையில் இருமொழிகளுமே போதனமொழிகளாக இருக்குமென்றும் அவர்கள்தெரிவித்திருப்பதாகஅறிகின்ருேம். சிலவேளை உயர்தரகல்விக் கம்மிஷனின் இந்தச்சிபாரிசு த்ட்டிப் பார்க்கும் ஓர்சோதனையாயும் இருக்கலாம். அவ்வாருயின் இதுவிஷயமாய்த் தமிழர்களும், அவர்களின் தலைவர்களும் எத்துணைவிழிப்பாய் இருந்துவருகிருர்களென்பதை இதுவரை கம்மிஷன் நன்குகவனித்திருக்குமென நம்புகிருேம்.

---

## கண்டிப் பாப்பரசர்குருமடம்

கண்டியிலே அம்பிற்றியாகுன்றின்மீது கடந்த 62 வருடகாலமாக விளங்கியிருந்த பாப்பரசர் குருமடம் சென்றவைகாசிமாதக் கடைசிவாரத்துடன் இந்தியாவிலுள்ள புனைகருக்கு மாற்றப்பட்டுவிட்டது. அதன் பேராசிரியர்களும், குருத்துவமாணவர்களும் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்னைநகர்வழியாகப் புனைகரை அடைந்து அங்கு சமீபத்தில் கட்டிமுடிக்கப் பெற்ற அலங்காரமிக்க புதியகுருமடத்தில்வசித்துத் தங்கள்படிப்பைத் தொடர்ந்து நடத்திவருகின்ருர்கள். இந்தக் குருமடம் யேசுசபையாரின் தெ நொபிலி கல்லூரியிலிருந்து அதிகந்தூரத்திலுள்ளதல்ல. பாப்பரசர் குருமடத்தின் அதிபர்களும், பேராசிரியர்களும், குருத்துவ மாணவர்களும் புனைகரிலே தங்களுக்கெனக் குறிக்கப்பட்டஇடத்துக்குச் சென்றபோதிலும் அம்பிற்றியாவிலுள்ள கவர்ச்சிகரமான குருமடக் கட்டடங்கள் அங்கு நிலைபெற்றிருந்த ஓர் பெரிய ஸ்தாபனத்தின் அழியாத ஞாபக சின்னங்களாய்த் திகழ்வனவாகும்.

இந்தியா-இலங்கையிலே கத்தோலிக்க திருச்சபையின் பெருமைவாய்ந்த சரித்திரத்தில் கண்டிப் பாப்பரசர் குருமடத்தின் வரலாறு பொன்னெட்சரங்களால் பொறிக்கப்படத்தக்கது. இதன் கீர்த்திவாய்ந்த ஸ்தாபகரான பதின்மூன்ரும் சிங்கராயபாப்பானவர் தூரநோக்குடன் எதிர்பார்த்ததையெல்லாம் இது சிறப்பாகப் பூர்த்திசெய்திருக்கிறது. அப்போது கிழக்கிந்திய தேசங்களின் அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாய் விளங்கியிருந்த லடிஸ்லோஸ் செலெஸ்கி அதிமேற்றிராணியாரே அவரின் திறமைவாய்ந்த பிரதிநிதியாயிருந்து இந்தக் குருமடத்தைத் திட்டஞ்செய்து உருவாக்கிப் பரிபாலித்து அதனைப் பிரஸ்தாபத்துக்குக் கொண்டு வரலாயினர். அம்மட்டா! திருச்சபையில் ஓர் இளவரசர் மாத்திரமல்ல, ஓர் போலிஷ் இளவரசருமான இந்தக்குருசிரேஷ்டர் கண்டியிலே பாப்பரசர் குருமடத்தை ஸ்தாபித்தமையால மாத்திரமல்ல, ஆனல், கண்டியைத் தமதுவாசஸ்தானமாக ஆக்கிக்கொண்டமையாலும் கத்தோலிக்க உலகமுழுவதிலும் இலங்கைக்குப் பெரும்பிரதாபத்தைக் கொண்டு வரலாயினர்.

---




## சதாசகாயமாதா கோணம்

### பிதாவை மனந்திருப்பிய பிள்ளை

(முன்தொடர்ச்சி)

யோசேப்புவின்மகள் மேரியோசேப்பின் வயதிலும், அழகிலும், புண்ணியத்திலும்வளர்ந்து இளமங்கைப்பருவம் அடைந்துவிட்டாள். தன் தகப்பனின் பரிதாபநிலைமையை உணரக்கூடிய பக்குவதசையையும் அடைந்துகொண்டாள். எல்லாத்திலும்பார்க்க அவருடைய ஆத்துமஇரட்சணியவிஷயம் அவளுக்கு அங்கலாய்ப்பைக் கொடுத்தது. பாவத்தில் முரட்டுத்தனமான பிடிவாதமாகத் தன் தகப்பன் இருந்தமை அவளுடைய தூயஇருதயத்துக்கு மிகுந்தகவலையைக் கொடுத்தது. இந்தக்கவலை அவளுடைய சாதுவானமுகத்தில் பிரதிபிம்பித்ததை எவருங் காணக்கூடியதாக விருந்தது. செபஉதவியன்றி வேறெதுவும தன் தகப்பனுக்கு உதவமாட்டாதென்று எண்ணினுள். சதாசகாயமாதாவின் அடைக்கலத்தைத்தேடி, அவவுடைய உபகாரசகாயங்களை இரந்து, அவவுடையமன்ருட்டுக்களின் உதவியைக் கேட்ட ஒருவராகிலும் அவவால் கைவிடப்பட்டதாக ஒருபோதுமே உலகிற் கேள்விப்பட்ட்டில்லையென்று யோசேப்பின் படித்தறிந்திருந்தாள். எனவே, பிள்ளைக்குரிய நம்பிக்கையோடு தேவதாயாரின் சுரூபத்துக்குமுன்னல் மணித்தியாலக்கணக்காகத் தன் தகப்பனுக்காக மன்ருடினுள். பாவவழி[illegible]பாவநோயையும், தேகநோயையும் பரிகரிக்கும்படி தேவதாயாரை அடிக்கடி இரந்துகேட்டாள். அவளின்மன்ருட்டு வீண்போகவில்லை.

யோசேப்பு ஆஸ்பத்திரியில் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிருன். தேகவருத்தமும், மனவருத்தமும் அவனைவாட்டவே, அவன் கட்டிலில் புரண்டுபுரண்டு அவதிப்படுகிருன். நித்திராதேவியின் சகவாசமும் அவனுக்குக்கிட்டுவதாயில்லை. கடைசியாக வெகுநேரத்துக்குப்பின் ஆழ்ந்தநித்திரையில் ஓர்அதிசய கனவுகண்டான். தனதுமகள் இருந்தமடத்துச் சிற்றாலயத்துள் எதுவிதமாகவோ தான்போனதாகக் கனவுகண்டான். அங்குசென்றதும் அவனது இளம்பிராயநினைவுகள் ஒன்றின்பின்ஒன்ருய் அவன் மனத்திரையில் தோன்றிக்கொண்டிருந்தன. தேவமாதாவின் சுரூபம் இருக்கும் இடத்தைத் தேடிப்பார்த்தான். அச்சுரூபத்தின்முன்போனுன். அப்போது அங்கே ஓர்அழகியமங்கை மூழந்தாட்படியிட்டுச் செபத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டான். அவளுடைய கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் வடிந்தோடுவதை அவதானித்தான். பிறர்கேட்கக்கூடிய தொனியில் விம்மல்பொருமலோடு அவள்செபம் பண்ணிக்கொண்டிருந்தாள். "தாயாரே! என்மேலும், என்னுடைய தகப்பனர்மேலும் இரக்கமாயிரும். பாவவழியைவிட்டு மனந்திரும்ப அவருக்குத்தேவையான வரப்பிரசாதத்தைக் கொடுத்தருளும். அவருடைய ஆத்துமத்துக்கு நன்மையெனக்கண்டால் அவருடைய சரீரநோயையும் தீர்த்தருளும். நான்உதவியற்ற அனதையென்பதும், அவரே என் தஞ்சமென்பதும் நீர்அறிவீர்." இதுவே அவள்சொன்ன செபம். அந்தஅழகான காட்சியைக் கண்ட யோசேப்பு பரவசமடைந்தான். கூறுகுறிப்பாகப் பார்த்தான். தான் எவ்வளவோ நேசித்த ஒருவர் சமுகத்தில் தான்நிற்பதாகவும், தனது இறந்த மனைவியின் சாயல் அச்சுப்பதித்ததுபோல் அவளில் இருப்பதாகவுங் கண்டான். உடனே அவன்தேகம்முழுதும் புல்லாரித்தது. தன் ஒரேஒரு மகள் தனக்காகப் பீடத்தண்டை மன்ருடுவதை உணர்ந்துகொண்டான்.

யோசேப்புத் திடுக்கிட்டுவிழித்தான். தான் ஆஸ்பத்திரியிலே கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டான். ஆனல், அவன் கண்டகனவு அவனுடையமனதில் ஆழமாகப்பதிந்திருந்தது. சற்றுவேளை சிந்தித்தான். தன்பரிதாபநிலைமையை உணர்ந்தான். அங்கேயிருந்த ஒருசிஸ்றரை அழைப்பித்தான். "சிஸ்றர், தயவுசெய்து ஒரு குருவானவரைச் சீக்கிரம் அழையுங்கள்; அவரின்உதவி எனக்கு அவசியந் தேவைப்படுகிறது" என்று சொன்னன். குருவானவர்வந்தார். தேவதாயாரின் ஊதாரிப்பிள்ளை தேவனேடு சமாதானம்செய்துகொண்டது. பாவச்சுமை பஞ்சாய்ப்பறந்தது. தேகத்தில் கொஞ்சங்கொஞ்சமாகப் பலம்ஏறியது. நோயின்குணம் இறங்கியது. சில கிழமைகளுள் பூரணசுகமடைந்தான்.

அவனுக்குத் தேகசுகமும், ஆத்துமசுகமும் தனது மாசில்லாதமகளின் மன்ருட்டால் கிடைத்தன என்று எண்ணிமகிழ்ந்தான். முழுச் சம்பவத்தையும் தன்மகளுக்குச் சொன்னுன். "என் அருமைமகளே! ஆண்டவர் எவ்வளவு விலையேறப்பெற்ற திரவியத்தை என்னிடம் ஒப்படைத்திருக்கிருர் என்பதை இப்போது அறிந்து கொண்டேன்; ஒருபிள்ளையின் செபவல்லமையை இப்போது உணர்ந்து கொண்டேன்; சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக; தேவதாயார் புகழப்படுவாராக" என்றுகூறி மகளைத்தழுவி முத்தமிட்டான்.

வாய் இனிக்கப்
பேசுவதை விடச்
செயலில் இறங்குவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசா. யோசேவாஸ்முனிவர்

❀ ஒல்லாந்தர்காலத்தில் இலங்கைக்கத்தோலிக்கர் இடையனில்லாத ஆடுகள்போல் ஆயினர். சமயஒளி மங்கிமறையும் போல் தோன்றியது. அவ்வேளை கடவுளின்கரங்கள் முனிவரை அனுப்பிவைத்தன. தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றுகிறதற்குக் குருமாரில்லாமல் செழிப்புக்குன்றிப் பாலைவனம்போலிருந்த கத்தோலிக்க பூமி முனிவரால் நறுமணங்கமழும் சோலையாய்மாறிற்று.

❀ முனிவரின் உடல் மறைந்து இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. ஆயினும், இலங்கை அவரை இப்பொழுதும் தன் இருதயத்தில் வைத்திருக்கின்றது. புனிதமான அவருடைய ஊழியத்தின் பலன்களை நாம் இன்றும் அனுபவிக்கின்றோம். அவருடைய துணைக்குருமாரால் எடுத்து எழுதப்பட்டும், நம்முன்னோர்வாயிலாகப் பரப்பப்பெற்று நமதுமத்தியில் உலாவும் சம்பவங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

❀ நமதுநாட்டின் அப்போஸ்தலரான முனிவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான விண்ணப்பம் பரிசுத்த பிதாவுக்கு அனுப்புமாறு தயாராகின்றது. இலங்கைக் கத்தோலிக்கர்மத்தியில் என்றென்றும் அழியாத உருவம்பெற்ற ஆசாரத்துக்குரிய முனிவரைப் பற்றித் தொடர்பாய் எழுத விரும்புகின்றோம்.

❀ தொடர்பான விஷயதானத்துக்குப் போதியகைச் சரக்கு நம்மிடம் உண்டா? சுவாமி S. G. பெரேரா, சுவாமி. ஞானப்பிரகாசர்போன்ற பேரறிஞர் தொகுத்துள்ள பெரிய விஷயப்பெட்டகங்கள் எவ்வளவோ கிடக்கின்றன. அவை கைமாறி வீட்டுக்குவீடு சுற்றித் திரியவேண்டிய திரவியங்களாகும். நமதுபத்திரிகைப் பந்தியானது அப்பேழைகளைத் திறந்து, அவற்றிலடைபட்டிருக்கும் இரத்தினக் கோர்வைகளை வெளியே இழுக்குமென்று எதிர்பார்க்கின்றோம்.

❀ எழுதப்பட்டிராத பாரம்பரியக் குவியல்களின் கதியென்ன? மேற்றிராணிமாரின் ஸ்தலவிசாரணை அறிக்கையின்படி, ரோமாபுரி ஒருஉத்தியோகபூர்வமான பொழிப்பை வெளியிடும்வரை அவை இரகசிய இடாப்புகளில் மறைந்திருக்கும். நமதுமூதாதையர் நமக்குக் கூறியபடியே அவை உலாவிவரும். அவையும் பத்திரிகையில் இடம்பெறும்.

❀ பாரம்பரியக் கதைகள் அல்லது சம்பவங்கள் என்ன ஆதாரத்தில் அல்லது அதிகாரத்தில் வெளியிடப்பட்டன என்பது பற்றித் தெளிவுபடுத்தத் தவறமாட்டோம். அன்றியும் பாரம்பரியசம்பவங்கள் வெறும் கற்பனைகளாயிரா. அவையும் சரித்திரத்தை ஆதாரமாய்க் கொண்டே வளரும்தன்மையுடையன; மேலும், கடந்தகால உண்மைச்சம்பவங்களை அறிதற்கு அவை துணைச்செய்யக்கூடியன. ஆயினும்இவை சம்பிரதாயமாகவே மதிக்கப்படவேண்டியவை.

❀ பிரசாரகர்களின் சிந்தனை சக்தியில்மாத்திரம்யோசேவாஸ் முனிவர் நமது இலங்கைக் கத்தோலிக்கர்மத்தியில் இன்றும் சீவந்தராய் இருக்கிறார்என்பது மறுக்கமுடியாததாகும். தேவபராமரிக்கையின் திட்டங்களுக்கேற்க அவர் தலையிடக்கூடியவர். அவருடைய முத்திப்பேறுபெற்றபட்டம் நமதுமன்றாட்டங்களில் பூத்துக்கனிய வேண்டியது.

❀ காந்தலான மன்றாட்டங்களினால் முனிவரிடமிருந்து காரியசித்திபெற்றவர்கள் மீளவும்அவற்றை நினைவூட்டுமாறு வேண்டப்படுகின்றனர். இவைகள்எல்லாம் முனிவர்சரித்திரத்தைச் சிறப்பிப்பதற்கு உதவும் இழைநூல்களாகும்.

❀ பதிப்பாசிரியரின் விஷயத்தில் நீர்கண்ட உண்மையைப் பற்றியோ, உமது விசாரணைப் பங்கு அல்லது உமதுபிறப்பிடத்திலுள்ள தொடர்பைப்பற்றியோ, சரித்திர சம்பந்தத்தையிட்டோ, அவர்பேரால் நீர் அடைந்த சகாயத்தைப்பற்றியோ எங்களுக்கு எழுதப்படுபவை சரித்திரக்கோவை மணிகளாய் உதவும்என்பதை நினைவூட்டுகின்றோம்.

[“கதலிக்மெசெஞ்சர்” பத்திரிகையில் வெளிவந்த ஓர்விஷயத்தைத்தழுவி ஆரம்பமாக இதுஎழுதப்பட்டது.]

## நற்கருணை நாதருக்கு



1. நீசரெங்கள் மத்தியினில் நேசமதால் வாசஞ்செய்ய
ஆசையுடன் வந்தயேசு அன்பருக்கே நமஸ்காரம்!

2. இரவுபகல் எப்பொழுதும் ஈனரெங்கள் மத்தியிலே
இரக்கமதால் வாழ்ந்திருக்கும் இரட்சகரே நமஸ்காரம்!

3. பாவப்பிணி யால்மெலிந்து பலவீன மானோர்க்கு
தேவமருந் தாகவந்த திருச்சுதனே நமஸ்காரம்!

4. பாவிகட்காய் ஆவியுடல் பலியாகச் செய்ததன்றிச்
சீவஉண வாகவுமைச் செய்தவரே நமஸ்காரம்!

5. தூயசிறு துண்டேபோல் தோற்றிடுதூ யப்பமதில்
காயமுயி ரோடிருக்கும் கர்த்தாவே நமஸ்காரம்!

6. தேடிவந்தீர் பாடுபட்டீர் சிறையானீர் சிநேகமதால்
நாடிவந்தும் திருப்பதத்தை நமஸ்கரியா திருப்போமோ?

7. ஆயனும்நீர் அப்பமும்நீர் அன்னையும்நீர் அரசனும்நீர்
நேயனும்நீர் மீட்பனும்நீர் நித்தியவா னந்தமும்நீர்

8. வேதனைசெய் துயிர்போக்க யூதர்சூழாம் சதிசெய்யும்
போதிலுமை நீர்மரண சாதனமாய் ஈந்தீரே

9. இப்பெரிய பந்திதனில் இருந்திடுநல் மாந்தர்கட்கு
செப்பரிய வான்மோட்ச சீவியத்தை வாக்களித்தீர்!

10. அரியவிந்தத் திரவியத்தை ஆவலுடன் பெறுவதற்கு
உரியவொரு இருதயத்தை உவந்தளியும் அடியோர்க்கு!

11. மன்னவரே! உமைமறந்து மானிடர்கள் வாழ்வதுஏன்?
அன்னவர்கள் உமையணுகி ஆசிபெறச் செய்தருளும்!

12. இத்தரையுள் உமைக்காண நேத்திரங்கள் மெத்தவுண்டே
அத்தனைக்கும் ஞானவொளி அளித்தருளும் ஆண்டவரே!

13. மெய்யுளுயிர் உள்ளவரை மேலோனே உமைமறவோம்
துய்யவுந்தன் தாள்பணிந்து சொல்லிடுவோம் நமஸ்காரம்!

— எஸ். குரூஸ்.

## பிரித்தானிய பொதுத்தேர்தல்

பிரித்தானியிலே சென்ற 26-ந்திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலிலே பிரதமர் சேர் அந்தோனி ஈடன்அவர்களின்கட்சியான கன்சர்வேற்றிவ்கட்சி அதிகம்கூடுதலான பிரதிநிதித்துவ பலத்தைப்பெற்று வெற்றியீட்டியது. தொழிற்கட்சி இரண்டுபட்டு நின்றதால் அதன்பலம் சிதறுண்டுபோய்விட்டது. தேர்தலிலே கன்சர்வேற்றிவ்கட்சி 344 ஸ்தானங்களையும், தொழிற்கட்சி 277 ஸ்தானங்களையும், லிபறல்கட்சி 5ஸ்தானங்களையும், சிற்பெயின்கட்சி 2ஸ்தானங்களையும் பெற்றுக்கொண்டன. கம்யூனிஸ்தகட்சி பெற்றஸ்தானங்கள் 0. பிரித்தானிய பாராளுமன்றத்திலே மெத்தமாகவுள்ள ஸ்தானங்கள் 630. கன்சர்வேற்றிவ்கட்சியின் பெரும்பான்மை 60.

## அரசாங்கம்வழங்கிய காணிகள்

கடந்த பன்னிரு வருடங்களிலும் நடுத்தரவகுப்பினருக்கு அரசாங்கம் வழங்கிய முடிக்குரிய காணிகளிலே நூற்றுக்கு 50 விகிதத்துக்கு மேற்பட்டவைகள் எந்தவிதமேனும் பயன்படுத்தப்படாது அந்தப்படியேஇருந்துவருகின்றன. கிராமங்களை விசாலிப்பதற்கென வழங்கப்பட்டகாணிகளிலும் நூற்றுக்கு 50விகிதம் மாத்திரமே திருத்திப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இலங்கை சுதந்திரம்அடைந்த பின்னர் கிராமங்களை விஸ்தரிப்பதற்கென்று இரண்டுலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளும், நடுத்தர வகுப்பினர் திருத்திப் பயன்படுத்தப்படுமாறு முப்பதினாயிரம் ஏக்கர்காணிகளும் அரசினரால் வழங்கப்படலாயின. அதனால், நடுத்தர வகுப்பினருக்குக் காணிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இனிமேல் அக்காணிகளைத் திருத்திப் பயன்படுத்தக்கூடிய தகுதியும், பொருள் வரவுமுடையவர்களுக்கு மாத்திரமே காணிகள் வழங்குதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

### தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

**ஞானோபதேசப்பரீட்சை—1955**

1. யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த சகல கத்தோலிக்க பாடசாலைகளிலும் 3-ம் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். சி. வகுப்பூடாக எல்லா வகுப்புகளிலுமுள்ள கத்தோலிக்க மாணவர்களுக்கு வருகிற கார்த்திகை மாதம் வருடாந்த ஞானோபதேசப் பரீட்சை நடத்தப்படும்.

2. பிரதம பாடசாலைப் பிள்ளைகள் ஞானோபதேச ‘B’ பாடத் திட்டத்திலும், ஏனைய பாடசாலைப் பிள்ளைகள் ‘A’ பாடத்திட்டத்திலும் பரீட்சிக்கப்படுவார்கள்.

3. ஞானோபதேசப் பாடத்திட்டங்கள் இல்லாதவர்கள் நமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager of R. C. Schools
Jaffna, 1-6-55.

### அர்ச். அந்தோனியார் திருநாள்

**மானிப்பாய்**

நிகழும் 10-6-55 வெள்ளிக்கிழமை நோவனைகள் ஆரம்பமாகும். தினமும் மாலை 6-30 மணிக்கு நோவனைகள் தொடங்கும்.

18-6-55 சனிக்கிழமை மாலை 7 மணிக்குத் திருநாள் வேஸ்பர்.

19-6-55 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் திருநாட் பூசையும், அதனைத் தொடர்ந்து திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும்.

கட்டளைக் குரவர்
மானிப்பாய்

### அரசாங்க அறிவித்தல்

**வனபரிபாலன இலாக்கா**

N. 1484—1002 அரிந்த மரத்துண்டுகளும், 456 அரிந்த பலகைத் துண்டுகளும், 32 பாலை. சமண்டலை, முதிரை, சூரியமாறை, ருணை, காட்டாமணக்கு ஆகியவைகளும், சுலான்கிக் மரங்களும் 15-6-55 மு. ப. 11 மணி தொடக்கம் மாங்குளம் அரசினர் மில் மரக்காலையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனவுக்குமுன் அவற்றைப் பார்க்க விரும்புவோர் மாங்குளம் டிப்போ கீப்பரின் அனுமதியுடன் பார்வையிடுவதுடன், அவரிடமிருக்கும் விளம்பரத்தின் பிரதான நிபந்தனைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

### அறிவித்தல்

**நவநாட் செபங்கள்**

பின் குறிப்பிடப்படும் நவநாள் துண்டுப் பிரசுரங்கள் உங்களுக்குத் தேவையாயின் இனமாக அனுப்பப்படும். அவற்றினால் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் பெரும் உதவி கிடைக்கும் என்பதே எமது நோக்கம். நீங்கள் விரும்பிய பிரசுரத்தை நாங்கள் அனுப்புவோம்.

10 சத முத்திரையுடன் பின்வரும் விலாசத்திற் கெழுதவும்.

சிறுமலர்ச் சங்கம்,
பெரியவிளான், இளவாலை.

தமிழ்ப் பிரசுரங்கள்:

1. பாத்திமா நாயகியின் நவநாட் செபங்கள்.
2. யூதா ததேயுஸ் அப்போஸ்தலரின் நவநாட் செபங்கள்.

இங்கிலிஸ் பிரசுரங்கள்:

1. The T. B. Saint
2. Novena to Blessed Martin De Porez.
3. Fatima and the Rosary.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரணம் என்ன ?

‘ ஜெயம் ’

ஒளிமிகுந்த ஆதவா !
ஒளிமிகுந்த ஆதவா !!
உலகமெங்கும் நிலையிலாது
ஓடியோடி மாய்வதேன் ?
மதிமிகுந்த மனிதனே !
மதிமிகுந்த மனிதனே !!
மண்ணகத்தை வாழவைக்க
மனமகிழ்ந்து செல்கிறேன்

●

நிலவுகாலும் சந்திரா !
நிலவுகாலும் சந்திரா !!
நிலவுதன்னை உலகுஉண்ண
நீயழிந்து தேய்வதேன் ?
கலையுணர்ந்த மனிதனே !
கலையுணர்ந்த மனிதனே !!
கவலையின்றி உதவிசெய்யக்
கற்றுணர்ந்து கொண்டனன்

●

மிருதுவான பவனமே !
மிருதுவான பவனமே !!
மேடுகாடெலாம்கடந்து
மிகவிரைந்து செல்வதேன் ?
உயர்வுகொண்ட மனிதனே !
உயர்வுகொண்ட மனிதனே !!
உரிமையான கடமைதன்னை
உவந்துசெய்யச் செல்கிறேன்

---

## திருப்பலி

### பிந்திய ஞாபகங்கள்

ஒருவர் கேட்டுக்கொண்டதின் பேரில் யேசு தமது முதற்புதுமையைச் செய்தார். மரியன்னைதான் அப்படிக் கேட்டா. அவர் அவகேட்டதை மறுக்கவில்லை.

வேறொருமுறை நான்குபேர் வருத்தமாயிருந்த தங்கள் சிநேகிதனை ஒரு தட்டைக் கட்டிலிலே சுமந்துகொண்டு யேசு போதித்துக்கொண்டிருந்த வீட்டிற்குப் போனார்கள். அவ்வீட்டில் சனம் நிறைந்துபோய் இருந்தபடியால் அவர்கள் யேசுவுக்குக் கிட்டப்போக முடியவில்லை. ஆகையால் அவர்கள் அவ்வீட்டின் தட்டைக்கூரைக்குத் தங்கள் நண்பனைக் கொண்டு போனார்கள். கூரையில் ஓரிடத்தைப் பிரித்துக் கட்டிலின்மூலைகளில் கயிற்றைக்கட்டி, வருத்தக்காரனை யேசுவின் பாதத்தடியில் இறக்கினார்கள். யேசு அம்மனிதனைச் சொஸ்தப்படுத்தினார். தங்கள் சிநேகிதனுக்கு உதவிசெய்ய அந்தமனிதர்கள் வந்ததையிட்டு ஆண்டவர் சந்தோஷப் பட்டார்.

பூசையில் நாங்களும் பிறருக்கு உதவிசெய்ய விரும்புகிறோம். அதற்காக “ ஞாபக ”ச் செபங்கள் உண்டு. தேவவசீகாத்தின்பின் வரும் இப்படியான ஓர்செபம் மரித்தோரை ஞாபகப் படுத்துகிறது. இந்தச்செபம் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக. அவர்கள் வருத்தப்படுகிறார்கள். அவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள முடியாது. ஆகையால், அவர்களை உத்தரிப்புத் தீயினின்று விடுதலை செய்யும்படி தேவனை இரந்து கேட்கிறோம். அவர்களுக்கு இளைப்பாற்றியும், பிரகாசமும், சமாதானமும் மோட்சத்திலே கொடுக்கும்படி மன்றாடுகிறோம்.

இன்னும் ஒருசெபம் உண்டு. அது சீவியருக்காக. அது ஏழைப் பாவிகளாகிய எங்களுக்காக. “ பாவிகள் ” என்று சொல்லும்போது, குருவானவர் நெஞ்சில் தட்டுகிறார். நாமெல்லாரும் பாவிகள் இதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். நாம் துக்கப்பட்டால் சர்வேசுரன் எங்களைப் பிள்ளைகளாகத் திரும்பவும் ஏற்றுக்கொள்வார்.

சுத்தவாளரின் கூட்டத்தில் எங்களையும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்கிறோம். அப்போது பல அர்ச்சியசிட்டர்களின் பெயர்கள் கூறப்படுகிறது. அவர்கள் எல்லோரும் வேதசாட்சிகள். தங்கள் விசுவாசத்திற்காக உயிரைக் கொடுத்தார்கள். சிலர் கற்பைக்காக்க மரித்தார்கள். அவர்கள் சர்வேசுரனை அதிகம் நேசித்தபடியால் அவருக்காகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தினார்கள்.

அக்னேஸ், செசிலியா போன்றவேத சாட்சிகள் இளம் பெண்பேதைகள். விசுவாசத்தைக் கைவிடாததற்காக அஞ்ஞான விரோதிகள் அவர்களை வதைத்தார்கள். துர்க் கிருத்தியஞ் செய்ய மறுத்தபடியால் அவர்களை வதைத்தார்கள். அக்னேஸ் என்பது லத்தின் வாக்கியம். செம்மறிபோல் மாசற்றது, தூய்மையானது என்று கருத்து.

பூசையில் நினைவுறுத்தப் படுகின்ற வேறொரு அர்ச்சியசிட்டர் அர்ச். முடியப்பர் (ஸ்ரீபன்). திருச்சபைக்காக உயிர்விட்டவர்களில் அர்ச். முடியப்பர் முதல்வர். சாகும்வேளை தமது விரோதிகளுக்காக அவர் மன்றாடினார். “ ஆண்டவரே, அவர்களில் இந்தப்பாவத்தைச் சுமத்தாதேயும்” என்றார். என்று சொல்லி நித்திரையானார்—கர்த்தரில் மரண நித்திரையானார்.

சுத்தவாளர் எல்லோரும் சர்வேசுரனை நேசித்தார்கள். தங்கள் அயலார்களையுங்கூட நேசித்தார்கள். நாம் அவர்களுடன் மோட்சத்தில் சேர்ந்திருக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம். அவர்களுடன்கூட இருப்போம். எப்படி ? அவர்களைப்போலச் சீவித்தால் — அதாவது சர்வேசுரனையும், எமது அயலாரையும் நேசித்தால்.

# பாலர் பக்கம்



### அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

இந்தவாரத்தின் விசேஷப்பட்ட முதற்தரமான திருநாள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? ஆம், அதுதான் தேவ நற்கருணைத் திருநாள்.

தேவநற்கருணை என்றால் என்ன ? மாமிச ஐக்கிய தேவஇரகசியத்தின் தொடர்ச்சி. சகல அற்புதங்களினதும் நிறைவு. கிறீஸ்துநாதரது சீவியத்தின் பிரதிபிம்பம். திருச்சபையின் சீவியமும், வெற்றியும். திருச்சபையை நிலைக்கச்செய்வதும் அதுவேயாகும்.

எழுத்தாளனோ, கவியோ, சுத்தவாளரோ இதைப்பற்றிச் சொல்லக்கூடிய பாஷிகம் ஒன்றே. அதாவது “ நற்கருணை தேவன் தாமே ” என்ற சத்தியம்.

நற்கருணையில் யேசு தம்மை முழுவதும் எங்களுக்கு அளித்ததையிட்டு அவருக்கு எல்லையில்லாத நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். நாம் அவருடையவர்களாய் இருப்பதே உத்தம நன்றியாகும்.

எங்கள் இன்பத்திலும், துன்பத்திலும், ஆன்மஇருளிலும், வெளிச்சத்திலும், பிறர்உதவி செய்யும்பொழுதும், கைவிடும்பொழுதும் இன்றும் என்றும் இப்பூலோக அஞ்ஞாத வாசத்தில் எம் ஆதரவும், ஆறுதலும் அவரே.

உங்கள் அன்புள்ள
அண்ணா.

---

## பெந்தெக்கோஸ்துவின் பின் 2-ம் ஞாயிறு

### நிருபம் : I யுவானி 3 : 13–18

ஆதிக்கிறீஸ்துவர்கள் மிகவும் துன்பப் பட்டார்கள். தேசத் துரோகிகளாகவும், சமூகத் துரோகிகளாகவும் கணிக்கப்பட்டார்கள். விரோதிகள் அவர்களைக் கொல்லத் தேடினார்கள். ஏன் இந்தக் கஷ்டமெல்லாம் ?

ஏனெனில், கிறீஸ்துவர்கள் பின்பற்றிய வழிவேறு. பிறர் கைக்கொண்ட வழி வேறு. கிறீஸ்துவர்கள் அல்லாதோர் பின்பற்றியது முரண்பாடான வழியாயிருந்தது ; அதுமாத்திரமல்ல, அவ்வழி சரியல்லவென்ற உண்மையையும் உரக்க உதாரத்துடன் உபதேசித்தார்கள் கிறீஸ்துவர்கள்.

இது, அடுப்புப்புகை கண்ணுக்குள் நுளைந்தது போலாயிற்று. எரிச்சல் வருவது சகசம். ஆகையால், பகைத்தார்கள். “ உலகம் உங்களைப் பகைத்தால், அதைப்பற்றி அதிசயப்பட வேண்டாம்.” “சகோதரநேச”த்தை உலகம் விளங்கிக் கொள்ளாது.

சகோதரநேசம் இல்லாதவனிடம் தேவநேசம் இராது. தேவநேசம் இல்லாவிடில் அவனுடைய ஆத்துமம் மாணித்து விட்டது.

சகோதரநேசம் எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் ? தேவன் நேசித்ததுபோல, யேசு நம்மை நேசித்து, நமக்காகத் தமதுஉயிரைத் தியாகஞ் செய்தார். நமது நேசமும் தியாகத் தால் வெளிப்படவேண்டும்.

இந்தத்தியாகம் பேச்சளவில் நில்லாது செயலிலும் இருக்கவேண்டியது. வறிய ஒருசகோதரனுக்கு “வாழி” என்று சொன்னாற் போதாது. வாழ வழிசெய்ய வேண்டும். பசியைப் போக்கவேண்டும்; தாகத்தைத் தீர்க்க வேண்டும். ஒருவரையும் நிராதரவாய், அனாதையாய் விடாமல் ஆதரிக்கவேண்டும். அதாவது சிநேகம் கிரிகையிலும் உண்மையிலும் இருக்கக் கடவது.”

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

* * *

### கிரிகையிலும் உண்மையிலும்

பிறர்சிநேகம் இதமான வார்த்தைகளில் மாத்திரமல்ல, கிருத்தியத்திலும் காணப்பட வேண்டியது.

ஒருநாள் ஒருவிருந்து நடந்து கொண்டிருக்கையில், கஷ்டப்படும் ஒரு குடும்பத்தைப்பற்றிப் பலரும் பலவாறுகப் பேசி அனுதாபப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதை ஒரு மனிதன் ஒன்றும் பேசாமல் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான். சற்று நேரத்தின்பின் அவன் தன் பணப் பையை எடுத்து, அதிலிருந்து பத்து ரூபா நோட்டை எடுத்தான். எடுத்து அதை ஒரு தட்டத்தில் வைத்து, “அந்த ஏழைக் குடும்பத்துக்கு நான் காட்டும் அனுதாபம் இதுதான் ” என்றான். தட்டத்தை மற்றவர்களிடமும் நீட்டி, “உங்கள் அனுதாபத்தை எப்படிக் காட்டப்போகிறீர்கள்”என்றான். சற்று நேரத்துள் தட்டம் நிறைந்து விட்டது. போதியதொகைப் பணஞ் சேர்ந்தது. அப்பணம் அவ்வேழைக் குடும்பத்துக்கு ஆறுதல் தந்தது

பேச்சிலும் பார்க்க இப்படிப்பட்ட செயல்களே மேன்மையுடையவை.

> புத்திமதி
> கூறுவதை விடக்
> கேட்பது அதிக சேமமானது.

## சரியான விடைகள்

சென்றவாரக் “ காவல ” னில் வெளியான கண்டுபிடியுங்கள் என்றதலைப்பின் சரியானவிடை :

1. சத்புருஷனுவன்
2. நரி
3. தேவாங்கு
4 பாம்பு
5. பன்றி
6. நாய்
7. வேட்டை நாய்
8. வெளவால்
9. கிளிப்பிள்ளை
10. கழுதை
11. வான்கோழி
12. மரம்
13. கழுகு
14. ஆந்தை
15. மனிதனுவன்

* * *

விடைகூறுங்கள் என்ற தலைப்பின் சரியான விடை :

1. 1, 2, 3
2. (1) 120.
(2) முறையே 81, 27, 9, 3 பழங்களாகப் பெற்றனர்.

இரண்டாவது பகுதிக்குச் சரியான விடைகொடுத்தவர்கள் :

பிரான்சீஸ் சென் றோக்,
சஞ்சுவாம் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தோமஸ்மூர் ஞானப்பிரகாசம்,
அர்ச். சூசையப்பர் பாடசாலை,
திரிகோணமலை.

எம். பேதுரு தமியான் தவரோர,
த. ஆ. பாடசாலை, போளவத்தை.

அன்ரனி சோசா,
த. ஆ. பாடசாலை, போளவத்தை.

அற்புதமலர் அருளானந்தம்,
ஏழாலை, சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன செய்கிறீர்கள் ?

அக்னேசும், செசிலியாவும் தங்கள் பாடசாலையில் நடக்கும் திருஇருதய வணக்கமாசத்தில் நாடோறும் பங்கு பற்றுகிறார்கள். நீங்கள்...!

மரியநாயகமும், அன்ரனும் பாடசாலைக்குப்போகும்பொழுதும், பாடசாலை முடிந்து வீட்டிற்குத் திரும்பும்பொழுதும் தேவநற்கருணையில் தனிமையாகக் காத்திருக்கும் யேசுவுடன் கதைத்துவிட்டுச் செல்லத் தீர்மானித்திருக்கிறார்கள். நீங்கள்...!

பங்கிராசும், சிங்கராசாவும் திருஇருதயப்பீடத்திற்குப் பசும்பூக்கள் சாத்திவருகிறார்கள். நீங்கள்...!

யேசுநாயகமும், சத்தியசீலனும் வெள்ளிக்கிழமைதோறும் சற்பிரசாதம் உட்கொண்டு திருஇருதய ஆண்டவருக்கு நிந்தைப்பரிகாரஞ் செய்துவருகிறார்கள். நீங்கள்...!

---

## குடும்ப செபமாலைப் படையணி

(வண. பெயிற்றன் சுவாமிகளின் மணிமொழிகள்)

### விசேஷ உதவி

உனது குடும்பத்தின்தேவை எவ்வளவு காத்திரமானதாயினும், அதன்நிலைமை எவ்வளவு கவலைக்கிடமானதாயினும் அதை நிவிர்த்திசெய்ய உனது தாய் — விண்ணுலகத்தாய் விரைந்துவருவாள்; நீ நம்பிக்கையுடன் அவளை நாடிப்போ; அன்புடன் அவளை அண்டிமன்றாடு; சக்திவாய்ந்த அவள் செபத்தை — குடும்பசெபமாலையை அனுதினமுஞ் செபி; நீயும் அர்ச். பெர்நாந்துடன் ஒரேவாக்காய் "உமது மன்றாட்டுகளின் உதவியைநாடிய எவனாவது உம்மால் கைவிடப்பட்டதில்லை" என நிச்சயமாய் மாதாவைப்பார்த்து மகிழ்வுடன்சொல்வாய். அர்ச். அல்போன்சஸ் றொட்றிக்கோ செபமாலைமணிகளைத் தொடர்ந்து உருட்டியதால் அவர் விரல்கள் உரத்துப்போயின என்று பாரம்பரியம் கூறுகின்றது.

### உளமாற்றம், உலகமாற்றம்

(பிரசித்திபெற்ற ஹொலிவுட் சினிமாநட்சத்திரம் லொறற்ரேயங் கூறுவது) 1945-ம் ஆண்டின் கோடைகாலம். யான் குடும்ப செபமாலைப்படைத் தளபதியை —பெயிற்றன் சுவாமிகளைச் சந்தித்தேன். அத்தினத்தை இன்றும் நினைவுகூருகின்றேன்; எமது குடும்பம் விசுவாசத்துடன் 'குடும்பசெபமாலை' யைத் தினமும் செபித்துவரின் அச்செபமாலை நமது குடும்பத்தின் தேவஆசிக்கும், தேவபாதுகாப்புக்கும் ஓர் அச்சாரமாகுமென அவர்கூறினர். அக்கூற்று என் உள்ளத்தைத் தொட்டது. அக்கூற்று ஒவ்வொருதாயின் உள்ளத்தையும், ஒவ்வொரு தந்தையின் உள்ளத்தையும் தொடும் எனஎண்ணுகின்றேன். பெயிற்றன் சுவாமிகள் இதைச்சொன்னார்கள் என்பதனல் அல்ல, நானே அதை முன்னரேஅறிந்து கொண்டேன் என்பதனல் இவ்வுண்மை என்உள்ளத்தைக் கிள்ளி அருட்டியது. தளராத விசுவாசமின்றேல்— பிறர்மட்டிலும், தேவன்மட்டிலும் அன்பு இன்றேல் — செபத்தின்மூலம் தேவனுடன் ஐக்கியம்இன்றேல் எமதுகுடும்பம் வெறுங்குடும்பம், இலக்கற்ற குடும்பம், கருத்தற்ற குடும்பமாய் அவலப்படும்.

உலகில் மனுக்குலத்தை விருத்திசெய்யும் சக்திவாய்ந்த நாம் அதை உத்தமகுலமாக்கும் பொறுப்பை உதறித்தள்ளிவிட முடியாது. எமது சொல்லும், எமது செயலும் எமது சந்ததியைப் பயிற்றி அதை உரியவழியில் நடத்தவேண்டும்.

எமது பிள்ளைகள் செபத்தின் பெறுமதியை, அதன் வல்லமையை மதிக்கவேண்டுமாயின் நாம் அவர்களுடன் அவர்கள்முன்னிலையில் செபித்துவர வேண்டும். பெயிற்றன்சுவாமிகள் என்று எம்மிடம் வந்தாரோ அன்று தொடக்கம் எனது குடும்பம், செபமாலைசெபிக்கும் குடும்பமாகியது. ஹொலிவூட்டில் அநேக குடும்பங்கள் செபமாலை செபிக்கும் குடும்பங்களாய் மாறின. ஏனெனில், 'குடும்பசெபமாலைப் படை' மனிதஉள்ளங்களை மாற்றும். மனிதஉள்ளங்கள் மூலம் மனுக்குலத்தையே—உலகத்தையே மாற்றிவிடும் எனும் உண்மை உளத்தில் ஊன்றியுள்ளது. இன்றைக்கே குடும்பத்துடன் செபமாலை செபிக்கத் தொடங்கி இதன் உண்மையைக் கண்டறிவோம்.

தமிழாக்கம்

ஆசிரியர், எல். பாக்கியநாதர்

---

● நமது திவ்வியகர்த்தர் ஜெருசலேமைப்பார்த்துக் கண்ணீர்விட்டழுத இடத்திலே "கர்த்தர் கண்ணீர்விட்டார்" என அறியப்படுகின்ற திருசேத்திரத்தை அகழ்ந்து ஆராய்ச்சிநடத்திய போது நான்காம்நூற்றுண்டைச்சேர்ந்ததாய் இருக்கவேண்டுமெனக் காணப்பட்ட ஓர்கோவிலின் [illegible] சுவர்களும் [illegible]

---

எச்சரிக்கை

# சூரிய கிரகணம்

## பார்வையைப் பறிகொடுக்காதீர்கள் !

ஒவ்வொரு சூரியகிரகணமும் ஏற்படும் வேளைகளிலே பலர் தங்கள் கண்ணொளியை இழந்துவிடுகின்றனர். இது "சூரியகிரகணத்தால்ஏற்பட்ட பார்வைக்குறைவு" எனப்படும். இந்தவிதமான பார்வைக்குறைவு சூரியகிரகணத்தைப் பார்ப்பதனுலுண்டாகின்றது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டன என்பதற்குப் பலகாலங்களுக்கு முன்பிருந்தே ஆதாரங்களும் இருக்கின்றன.

கண்விழிகள் வெளிச்சம் முதலியவற்றைக் கண்ணிலுள்ள மிக உணர்ச்சியுள்ள பாகத்துக்குப் (Retina) புலப்படுத்துகின்றன. அதனுலேயே நாம் எதையுங் காணமுடிகிறது. இந்தப் பகுதியிலுள்ள மக்யூலா (Macula) என்ற மற்றுமோர்பகுதி பாதிக்கப்படுவதினுலேதான் நாம் கணபார்வையை இழக்கின்றோம். ஒருமுறை இந்தப்பகுதியில் ஊறுசம்பவிக்குமானுல் மீண்டும் நாம் இழந்த ஒளியை வைத்தியஞ்செய்து பெறலாம் என எண்ணுவது தவறு. இதற்கு மருந்தே இல்லை.

கைவிரல்களை அடுக்கி விரல்களின் இடைவெளிவழியே பார்ப்பதாலோ, அன்றிப் புகைபிடிக்கப்பட்ட கண்ணுடியின் உதவிகொண்டு பார்ப்பதனுலோ கண்கள் பாதிக்கப்படுவதில்லை எனக் கருதல் தவறாகும்.

கண்களுக்குத் தீங்கைத் தேடிக்கொள்ளாமலிருப்பதற்கான ஒரேவழி சூரியகிரகணத்தைப் பாராமலிருப்பதேயாகும். பார்க்கத்தான் வேண்டுமென ஆசைப்படுவோர் ஒரு கடதாசி அட்டை (மட்டை)யிலே குண்டூசியினுல் ஒரு துவாரஞ்செய்து அந்தத் துவாரத்தின் வழியே சூரியனுடைய உருவம் ஒரு கறுத்த அட்டையிலே தெரியும்படி பிடித்தல் வேண்டும். மிகச் சாதாரணமான இந்த முறையைக் கையாண்டால் கிரகணத்திற் பலபடிகளை விளக்கமாகவும், இலகுவாகவும் பார்க்கமுடியும்.

**புத்திசாலித்தனமாக உங்கள் கண்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் !**

*யாழ்ப்பாணம் கண்சிகிச்சை நிலையத்தால் உதவப்பெற்றது—1955*

யாழ்ப்பாண சுகாதாரசேவைச் சங்க வெளியீட்டிலிருந்து அனுமதிக்கப்பட்டது.

---

## மாதாவின் பெயர்சூடிய மருந்து

குஷ்டரோகத்திற்குப் புதிதாக ஓர் மருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளதென்றும், அம்மருந்தைக் கண்டுபிடித்த கன்னியாஸ்திரியின் பெயரைமுன்னிட்டு அதற்கு "மைக்கோ பக்ரீறியம் மரியானம்" என்றபெயர் சூட்டப்பட்டிருக்கிறதென்றும் முன்னர்செய்தி வெளியிட்டிருந்தோம். அம்மருந்தைப் பற்றியும், அதைக் கண்டுபிடித்தவரைப் பற்றியும் மேலும் பலவிபரங்கள்கிடைத்துள்ளன.

தேவமாதாவை மகிமைப்படுத்தும் முறையிலே சங். மரி சூஸான்கன்னியாஸ்திரி தான்கண்டுபிடித்த மருந்துக்கு *Mycobacterium Marianum* என்று பெயர்கொடுத்தார். மாதாவுக்கு நன்றி செலுத்தும்வகையிலே அந்தமருந்து அடங்கிய ஒருசிறியசீசாவை லூர்துபதியில் மாதாகாட்சியளித்த திருக்கெபியில்கொண்டுபோய் வைத்திருக்கின்றார்.

சங். மரி சூஸான் கன்னியாஸ்திரி 1889-ம் ஆண்டு பரீஸ்நகரில் பிறந்தவர். 17-ம் வயதில் மரியாயின் மிஷனரிய சகோதரிகள் சபையில்சேர்ந்து 21-ம் வயதில் பீஜிதீவுகளில் ஒன்றாகிய மக்கோகாய்என்ற தீவையடைந்து மற்றொரு கன்னிகையுடன் சேர்ந்து குஷ்டரோகிகளைப் பராமரிக்கும் விடுதி ஒன்றைத் திறந்தனர். இந்தவிடுதி நாளுக்குநாள் விருத்தியடைந்து, 25 வருடங்களிலே 900 கட்டில்களைக் கொண்ட பெரிய விடுதியாயிற்று. இந்தவிடுதியிலே உழைத்து வருகையில்தான் இவர் குஷ்டரோகத்திற்கு மருந்து கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சிகள்நடத்தத் தொடங்கினர்.

1936-ம் ஆண்டு இவர் பிரான்சுக்குத் திரும்பஅழைக்கப்பட்டுப் பரீஸ் நகரிலே குஷ்டரோகிகளைக் கண்காணித்துவந்தார். அதே சமயத்தில் அந்நகரிலுள்ள பாஸ்தோ ஸ்தாபனத்திலே தமதுஆராய்ச்சிகளைத் தொடர்ந்துநடத்திவந்தார்.

[illegible] உலகயுத்தத்தின் [illegible] இவர் லையன்ஸ்நகரில் செஞ்சிலுவை நேர்ஸ்மாரைப் பயிற்றுவிப்பதில் ஈடுபட்டிருந்தார். ஓர்ஆகாயவிமானப் படையெடுப்பின்போது இவர் தைரியத்துடன் வெளியிலேநடமாடிக் காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்துவந்ததைப் பாராட்டிப் பிரான்சியஅரசாங்கம் இவருக்கு ஒருகௌரதாபதக்கம் வழங்கியது. யுத்தம் முடிந்தபிறகு இவர் லையன்ஸ்நகரிலேயே ஓர்சிறியஆராய்ச்சிச்சாலையை நிறுவினர். மிஷனரிய நாடுகளிலே உழைத்துவருகையில் குஷ்டரோகம் தொற்றித் தாய்நாடுதிரும்பிய மிஷனரிமாருக்கு உதவிசெய்யும் நோக்கத்துடன் இவர் ஆராய்ச்சிகள்நடத்திவந்தார். பீஜிதீவுகளில் இருந்தபோது உபயோகித்துவந்த பழைய அணுதரிசினிக் கண்ணுடியையே (மைக்ரோஸ்கோப்) அப்பொழுதும் உபயோகித்துவந்தார்.

ஒருநாள் எழுபதுவயதுள்ள ஓர்குருவானவர் சங். மரி சூஸான் கன்னியாஸ்திரியின் ஆராய்ச்சிச்சாலைக்குச்சென்றார். வண. ஷோவீர் (Fr. Chauvire) என்ற இந்தச்சுவாமியார் ஆபிரிக்காவிலே உழைத்துவருகையில் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டுத் தாய்நாடு திரும்பியவர். "சகோதரியே, உங்கள் ஆராய்ச்சிகளுக்கு வெள்ளைஎலிகளைப் (Guinea-pigs) பயன்படுத்திக்கொள்வதுபோல் என்னையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்றார் சுவாமியார். மரி சூஸான் கன்னியாஸ்திரி அவருடையகால்களிலும், கைகளிலும் குஷ்டம் தாக்கியிருந்த பகுதிகளிலிருந்து கொஞ்சம்சதையை எடுத்துத் திராவகத்தில் கரையச்செய்து பதினைந்து குப்பிகளில் எடுத்துவைத்தார்.

சங். மரி சூஸான்கன்னியாஸ்திரிக்கு உதவிபுரிந்துவந்த பேர்த் றபிலு (Mlle. Berthe Rabilloud) என்ற பெண் அந்தப் பதினைந்துகுப்பிகளுள் ஒன்றில் ஒருசிறிய மஞ்சள்புள்ளிபோன்ற கிருமியைக்கண்டாள். பிறகு மற்றும்பல கிருமிகள் தோன்றின. அவற்றைக் கொண்டு ஆராய்ச்சிகள்நடத்தி மரி சூஸான்கன்னியாஸ்திரி ஒருபுதியமருந்தைக் கண்டுபிடித்தார். அந்தமருந்தின் பிரயோகத்தால் முதன்முதலாகச் சொஸ்தமடைந்தவர் வண. ஷோவீர் சுவாமியார்தான்.

ஆபிரிக்காவிலே கமறூன் பிரதேசத்திலுள்ள டக்றர் எம். பிளான் அவர்கள் தான்சுமார் 1,500 குஷ்டரோகிகளுக்கு இந்தப்புதிய மருந்துகொண்டு சிகிச்சைசெய்து நல்லபலன் கிடைத்துவருகிறதெனத் தெரிவித்துள்ளார். பெனிசிலின்மருந்தைக் கண்டுபிடித்தவரான டக்றர் பிளெமிங்அவர்களின் உதவிஆராய்ச்சியாளரான புறெபெசர் ஈ. பி. செய்ன்அவர்கள் மரி சூஸான் கன்னியாஸ்திரியைப் பாராட்டுகையில் "உங்களுக்கு ஒருநாள் நோபெல்பரிசு கிடைக்கும்" என்றார். றோமைப் பிரபல டக்றர்மாருள் ஒருவராகிய புறெபெசர் ஜி. பென்ஸோஅவர்களும் இந்த மருந்தை மிகவும் பாராட்டியிருக்கின்றார்.

(ச. வி.)

---

## பாத்திமாஅன்னை திருநாள்

போளவத்தை விசாரணைப்பங்கைச் சேர்ந்த கன்னியர்மடத்திலே நவமாகக் கட்டப்பட்டுள்ள பாத்திமாஅன்னையின் கோவிலில் சென்ற 31-5-55 செவ்வாய்க்கிழமை அன்னையின் திருநாள் தமிழ்ப்பெண்பாடசாலை மாணவிகளால் பக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்று கோவிலானது பலவர்ண இயற்கை, செயற்கைமலர்களால் அழகுறச் சிங்காரிக்கப்பட்டுத் தேசோமயமாய்க் காட்சியளிக்க, காலை 6–30 மணிக்குப் பாடசாலைமாணவிகள் இன்னிசையாகக்கீதங்கள்படிக்க, கட்டளைக்குரவர் வண. யு. கிளமென்ட் பர்ணாந்து சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது.

வ. அனக்கிளீட்டஸ் லோவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FOR SALE

Matured trees, Jack, Lunumedilla, Hurimara, Sapu, Albizzia and Arecanut reepers. Easy lorry transport, 4 miles from Matale. Offers invited. Superintendent, Crystal Hill, Matale.


## GOVT. TENDERS

**Mannar Kachcheri**

N1528—Tenders for the Re-sale of toddy rent—Toddy Tavern No. 5, Kaddadivayal, for the period 1-7-55 to 30-6-56, close at 10 a.m. on 21-6-55. For particulars see Part 1—Section II, Govt. Gazette, 10-6-55.

## உல்லாசப் பிரயாணம்

போளவத்தை அர்ச். உத்தரியமாதா ஆலயத்தைச்சேர்ந்தமாசில்லாதமரியாயின்கூட்டப் பெண்பாலார்க்கு அன்று ஒருபெரும் மகிழ்ச்சிக்குரிய தினம். எமதுகட்டளைக்குரவர் வண. யு. கிளமென்ற் பொன்னுண்டோசுவாமியவர்கள் சென்ற 23-5-55 திங்களன்று கண்டி, போாதனை முதலிய மலைநாட்டுப் பட்டினங்களைத்தரிசிக்க எம்மைஅழைத்துச் சென்ருர். அன்றுகாலை 4-30 மணிக்குப் போளவத்தை ஆலயத்தில் திவ்விய பூசைகண்டு, தேவஆசியைப் பெற்றுக் கொண்டு பயணத்தை ஆரம்பித்தோம். எம்மை மூன்று விசேஷபஸ்வண்டிகள் ஏற்றிச்சென்றன. காலை 8-30 மணியளவில் குருநாகலை அடைந்தோம். அங்கு காலைப்போசனஞ் செய்தபின் மலைநாட்டைநோக்கிப் புறப்பட்டோம். ஆ! என்ன அலங்காரகாட்சி! சமவெளிகள், பள்ளத்தாக்குகள், மலைகள் ஆதியவற்றை மாறிமாறிக்கண்டோம். இயற்கைஅன்னையின் எழில்மிகு காட்சிகளை வழியின் இருமருங்கும் கண்சோராமல்கண்டு பரவசமுற்ருேம். பஸ் வண்டிகள் மலைநாட்டினுள் வளைந்து வளைந்து ஏறிஇறங்கிச் சென்றுகொண்டிருந்தன. பகல் 11-30 மணியளவில் கண்டிப்பாப்பரசர் குருமடத்தை அடைந்தோம். அன்று அதன் சரித்திரத்தில் ஓர் விசேஷதினம். துக்ககரமானதினமென்றே சொல்லவேண்டும். கடந்த 62வருடங்களாகக் கண்டியிலே இடம்பெற்றிருந்த இந்தக் குருமடம் இந்தியாவிலுள்ள புனநகருக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அதன் போாசிரிய குருமாரும், குருத்துவமாணவரும் இடம் மாறுவதற்காகத் தத்தம்அலுவல்களில் தீவிரமாக ஈடுபட் டிருந்தார்கள். அன்றுதான் கண்டிக் குருமடத்திலே அவர்களின் கடைசித்தினம். ஆசியாவின் பலபாகங்களிலும் தேவ தொண்டாற்றிவரும் பலநூற்றுக்கணக்கான குருமாரைப் பயிற்றிய இந்தக்குருமடத்தின் அந்திய தினமன்று எங்கள் தரிசனையானது போளவத்தையின்சார்பாக ஓர் பிரியாவிடை அருளத்தான் சென்றேமோ என்று சிந்திக்கச்செய்தது. குருமடச்சூழலிலே மதியப்போசனம் ஆனந்தமாக அருந்தியபின் கண்டிநூதனசாலை முதலியவற்றையும் களிப்புடன் பார்வையிட்டோம். பின்னர் இலங்கையின் அழகிய போாதனைப் பூந்தோட்டத்தைச்சென்று பார்வையிட்டோம். அதன்மேல் குண்டசாலைக் கமப்பாடசாலையையும் சென்று அவதானித்தோம். இவைகளையெல்லாம் பார்த்தபின் அரைமனதுடன் வீடு நோக்கிப் பயணத்தைத் தொடக்கினேம். இருளும் சூழ்ந்துகொண்டது. கடைசியாக உல்லாசப் பிரயாணம் இனிதே முடிவெய்திற்று. கடவுளுக்குத் துதிசெலுத்துவதோடு, எம்மை அன்புடன் வழிநடத்திப் பற்பல காட்சிகளையும் எமக்குக்காண்பித்த நமது ஞானத்தந்தையருக்கும் நன்றித்துதி கூறுகின்றேம்.

M. S. Soza

## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**வணக்கமாத ஊர்வலம்**—வணக்கமாதத்தை இனிதே முடிக்குமுகமாக வருடந்தோறும் நடைபெற்றுவரும் தேவதாயாரின் திருச்சுரூப ஊர்வலம் இம்முறையும் வழக்கம்போலச் சென்ற 31-5-55 செவ்வாயன்று சிறப்பாக நடந்தேறியது. மாதாவை வரவேற்பதில் தங்களுக்குள்ள ஆர்வத்தைக்காண்பிக்கும்பொருட்டு ஊர்வலஞ்சென்ற வீதிகளை அங்கங்குவதியும் கத்தோலிக்கமக்கள் நன்கு அலங்கரித்தனர். ஊர்வலமுடிவில் பரிசுத்த வியாகுலமாதாகோவில்வளவின் திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருந்த பீடத்தின்அண்மையில் வண. கட்டளைக்குரவர் ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமியார் ஓர் பிரசங்கஞ்செய்தனர். அதன்மேல் அவராலும், வண. ஏ. அலோசிங், வண. ஜே. டிக்கோனிங் குருப்பிரசாதிகளாலும் வேஸ்பர்பாடிச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டதும் வணக்கமாத ஊர்வலவிழா இனிதே முடிவுற்றது.

**பங்குத்தரிசிப்பு** — திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி ஆண்டவரவர்கள் ரோமாபுரிசென்று திரும்பியபின் முதன்முறையாக ஆனிமாதம் 11-ந் திகதி தாண்டவன்வெளிப் பங்கைத் தரிசிப்பார். அன்றுபிற்பகல் அவரால் உறுதிப்பூசுதல் இங்குஅருளப்படும். 12-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அவரால் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப் படும். ஆண்டவரவர்களை இனிதே வரவேற்பதற்கான தக்கஏற்பாடுகளை இப்பங்குக் கத்தோலிக்க மக்கள் செய்துவருகின்றூர்கள்.

— நிருபர்

## "சபிக்கப்பட்டவர்களே! என்னைவிட்டகன்று..."

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ருர். நாமெல்லோரும் ஒவ்வொரு ஜெருசலேம்பட்டணமாய் இருக்கிறேம். நம்முடைய பரிதாபநிலைமையைக்கண்டு இவ்வண்ணமே கர்த்தர் எங்களையும்நோக்கிக் கண்ணீர்விட்டு வசனித்தார். அவர்வசனித்ததுபோல் "ஒருநாள்வரும்." ஒருநாள் கட்டாயம்வரும். அதுதான் "பழிவாங்கும் தீர்வைநாள்." இந்நாளின் வர்ணனையை நாம்மேலேகண்டோம். அதனால் இவ்வித பயங்கரமான அவலத் தீர்வைக் குள்ளாகாமல் இப்பொழுதே எங்கள்மனதைத் தேவன்பக்கமாய்த் திருப்பி அவருடைய சாபத்தீர்வைக் குத்தப்பி மோட்சகரைசேர வருந்துவோமாக! "ஆகையால், சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பித்துக்கொள்ளவும், மனுமகன் முன்பாகநிற்கவும் பாத்திரவான்களென்று எண்ணப்படும்பொருட்டு எந்நேரமும் செபத்துடன் விழிப்பாயிருங்கள்" (லூக். 21 : 36) என்னும் கர்த்தரின்எச்சரிக்கை நமது கண்முன்பாக என்றும்இருப்பதாக!

● பிரான்சிய மலையேற்றகாரரின் ஆராய்ச்சிக்கோஷ்டிஒன்று நேபாளத்திலுள்ள மகாலுஎன்ற27,790அடி உயரமான சிகரத்தில்ஏறி அதனை வெற்றிகொண்டிருப்பதாய் அகிலஇந்திய வானெலி தெரிவித்திருக்கின்றது. இச்சிகரம் உலகின் ஐந்தாவது மகா உன்னதமான சிகரமாகும்.

● முன்னர் இலங்கையின் பிரதம நீதியரசராயிருந்த சேர் ஏபிரகாம்ஸ் அவர்களின் பாரியாரான லேடி றூத் ஏபிரகாம்ஸ்சீமாட்டி சமீபத்தில் நடைபெற்ற பிரித்தானிய பொதுத் தேர்தலிலே ஓர்அபேட்சகராகப் போட்டியிட்டு மூன்றும்முறையாகவும் தமது கட்டுப்பணமாகிய 150 பவுணையும் இழந்தபோதிலும் இம்முறை அவர் இருதேர்தல்களிலே இவ்வாறு படுதோல்வியடைந்தார்.

## நாடு சங்கதிகள்

● வத்திக்கானிலே சென்றவைகாசி 28-ந்திகதியன்று பரிசுத்தபாப்பரசரின் பேட்டிபெற்றுக்கொண்ட பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் கிருசியாஸ்ஆண்டவர் பிரித்தானி, பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம், ஒல்லாந்து ஆதியாம்நாடுகளிலே இரண்டரைமாதகாலம் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பவிருக்கின்றூர்.

● வியெற்னுமைச்சேர்ந்த சைகோன்நகரிலே அர்ச். வின்சென்ற் டி போலின் பிறர்சிநேக குமாரத்திகள் கன்னிகாசபையைச் சேர்ந்த 32 வயதுடைய சிஸ்றர் மத்தில்டேஎனும் வியெற்னுமிய கன்னியாஸ்திரி மாதம் ஒன்றுக்குச் சாராசரிவீதமாக 1,500 பேருக்கு ஞானஸ்நானங் கொடுத்துவருகின்றூள். இவள்அங்கே வறியவர்களின் வீடுகள், குடிசைகளைச் சந்தித்து ஓர்நேர்சாக அவர்களுக்குச் சேவைசெய்து வருகின்றூள்.

● சென்ற 5-ந்திகதி பம்பாய்நகரிலே சந்தாக்குருஸ் விமானநிலையத்திலிருந்து கொச்சிக்குப்புறப்பட்ட ஓர் இந்திய ஆகாயவிமானம் ஆகாயத்தில் பறந்ததும் ஓர்கழுகு அதனைத்தாக்க ஆரம்பித்தது. விமானம் வானத்தில் உயர உயரப் பறக்கப் பறக்கக் கழுகும்பறந்து அதனைத்தாக்கிற்று. ஐந்து நிமிஷங்களாக இந்தத்தாக்குதல் நடைபெறவே கழுகுடன்போராடுவது ஆபத்தென்று விமானிநினைத்துத் திடீரென விமான நிலையத்தில் விமானத்துடன் இறங்கிவிட்டார்.

● ஜப்பானிய கத்தோலிக்கருக்கென்று மூன்றுவிதமான ஞானோபதேசப் புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று, பிள்ளைகளுக்கும் மற்றென்று, உயர்தாக்கல்விபெறாத வளர்ந்தவர்களுக்கும் இன்னொன்று, கற்றவர்களான வளர்ந்தவர்களுக்கும் ஜப்பானியஅதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரால் நியமிக்கப்பட்ட கமிற்றிஒன்றே இவற்றைச் சித்தஞ்செய்து வருகின்றது.

● இங்கிலாந்தின் முதலாவது எலிசபேத் அரசியைத் திருச்சபைக்குப் புறம்பாகத்தள்ளி ஐந்தாம் பத்திநாதபாப்பானவர் விடுத்த அதிகாரப்பத்திரத்தின் பிரதிஒன்று சமீபத்திலே பிரசித்தஏலத்தில் விலைப்படலாயிற்று. அதனைக் கைகவுண்ட் பேர்னெஸ் பிரபு 520 பவுண்விலைகொடுத்து வாங்கியிருக்கின்றூர். இது காலஞ்சென்ற அந்திரே டே கோப்பெற் என்பவரின் நூல் நிலையத்தில் இதுகாலவரை இருந்துவரலாயிற்று.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தினுலும், சதாசகாயமாதா,(பரிசுத்தலூர்துதாயின்)மன்ருட்டினுலும் எனதுமனைவிக்கு இருந்த கடினநோய்நீங்கிச் சுகம் காணப்பெற்றேன். அதனல் அவர்களின் நாமத்துக்குத் தோத்திரமாக நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன். இவர்கள் நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

மாதகல் P. P. M.

### நன்றியறிந்த தோத்திரம்

அர்ச். வின்சென்ற் டிபோலே! எனது இருகரமும் எடுத்து உமக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பணக்கஷ்டம் என்ருல் நான் பெரிதும் மனக்கஷ்ட முற்றுக் கலங்கிய போது அதிசயிக்கத் தகுந்த விதமாய் எனக்குத் துணையாக வந்து எதிர்பாராத விதமாய் எனது இருகஷ்டங்களையும் தீர்த்து வைத்த உமக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். நீர் செய்த உபகாரத்தை இவ்விதம் பிரசித்தம் செய்வதே என்னுற் கூடிய கைம்மாறெனக் கருதுகிறேன்.

ஓர் பக்தன்

## இளைஞர்களின் லண்டன்பிரயாணம்

திரு. வென்செஸ்லாஸ் இராசேந்திரம், திரு. எட்வின் செல்லர் எனும் யாழ்ப்பாணத் தமிழ்இளைஞர் இருவர் பக்கக்காருடன்கூடிய மோட்டர்சைக்கிள் வண்டிஒன்றிலே சென்ற 6-ந்திகதி திங்கட்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவழியாய்த் தரைமார்க்கமாக லண்டன்நகருக்குப் பிரயாணமாகியிருக்கின்றனர். அன்று சாயந்தரம் யாழ்ப்பாண நகரமண்டபமுன்றிலிலே வடமாகாண ஏசன்றர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்களும், யாழ்ப்பாணமேயரும், மற்றும் நகரசபை அங்கத்தவர்கள்சிலரும், இளைஞர்கள்இருவரதும் பெற்றேர், இனசனர், அன்பர்களும் திரளாகக்குழுமியிருந்து அவர்களை வழியனுப்பிவைத்தார்கள். அத்தருணம் ஏசன்றர்அவர்களும், மேயர்அவர்களும் ஆற்றிய சொற்பொழிவுகளிலே தங்கள் உற்சாகமொழிகளால் அவர்களுக்கு ஊக்கமளித்து, ஆசிகூறினின்றூர்கள். இவர்களில் திரு. வென்செஸ்லாஸ் இராசேந்திரம் யாழ்ப்பாணம் சந்தியோகுமையோர்கோவில் மூப்பராக விளங்கியிருந்த திரு. எம். பி. இராசேந்திரம்அவர்களின் கனிஷ்டபுதல்வர். திரு. எட்வின் செல்லர் இளவாலைவாசரும், ஓவசியராயிருந்து இளைப்பாறியவருமான திரு. எஸ். செல்லர்அவர்களின் புதல்வர். இவர்கள் மூன்றுமாதத்தில் தங்கள்பிரயாணத்தை முடித்து லண்டன் நகர்போய்ச்சேரத் திட்டமிட்டிருக்கின்றூர்களென அறிகின்றேம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11193.

யாழ்ப்பாணம், கரையூர்

1. கவுரியல் சவுரியானும்,
2. பெண் சவிரியம்மாவும்.

— வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம், கரையூர்

1. அந்தோனிப்பிள்ளை யோசேப்புவும்,
2. பெண் ஆனையும்.
3. அந்தோனி மனவலும்,
4. பெண் சிசிலியாவும்.
5. மனவல் அந்தோனிப்பிள்ளையும்,
6. பெண் பிரகாசியும்.
7. யக்கோப்பிள்ளை அகுஸ்தீனும்.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11193-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1955-ம் ஆண்டு ஆடிமாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக் கோயிற்பற்று கரையூரிறை குடியிருப்புவளவு பேடசு $16\frac{1}{2}$. இதில்ஓர்பகுதி இப்போ 35 வருஷகாலத்துக்குமுந்தி 1-ம், 2-ம் எதிரிகளால் ஒற்றுமைப்பட்டுப் பாட்டிசன் பண்ணினதின் போாலும், எல்லைவைத்ததின் போாலும் $4\frac{}{8}$ பேடசும், புதிதாகக்கட்டப்பட்ட கல்வீடும் குசினியும், மற்றுமதைச்சேர்ந்தவைகளும்.

எல்லை, கிழக்கு: அந்தோனி மனுவேலுக்குடையவாதனமும் யோசேப்பு செல்லத்துரைக்கு முடையவாதனமும். வடக்கு: ஒழுங்கை. மேற்கு: ரேட்டு. தெற்கு: ரேட்டு.

இக்காணியைப்பற்றி ஏதாகுதல் வேறு விபரம் அறியவிரும்பினுல் கனந்தங்கிய பிறக்றர் யாழ்ப்பாணம் சீதாரி யோண் பற்றிக் அவர்களிடம் அறியலாம்.

S. Ratnasabapathy,
கொம்மிஷனரும்,
வெந்தீஸ் மேஸ்தரும்.

51, Fourth Cross Street,
Jaffna. 30-5-1955

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 9-1955.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org